# பாரதமணி

அயல் உலக யாத்திரை



சர்வஜித்து ௵ ஆவணி ௴
AUGUST 1947

**BHARATA MANI**
Editor
K.S.VENKATARAMANI

4
அணா

## ஒரு விஷயம்!

நாம் எவ்வளவோ விதங்களில் பணத்தைச் செலவு செய்கிறோம். ஆனால், மிகவும் உபயோகமுள்ள வழியில் செலவிடுவது அவசியம் அல்லவா?

ஆம்—'பாரத மணி'க்கு ஒரு வருஷ சந்தாவைக் கட்டிவிடுங்கள். அதிகமில்லை, மூன்றே ரூபாய்தான்.

உங்கள் { அறிவு விருந்து / பொழுது போக்குச் } சாதனம்

பிரபல எழுத்தாளர்கள் எழுதுகிறார்கள்
பல ரக விஷயங்கள் வாசக நேயர்களுக்கு வழங்கப்படுகின்றன
விளம்பரங்களுக்கு அரிய சாதனம்

சந்தா விவரம்:—

| | | | |
|---|---|---|---|
| ஒரு வருஷத்துக்கு | 3 | 0 | 0 |
| ஆறு மாதத்துக்கு | 1 | 8 | 0 |
| தனிப் பிரதி விலை | 0 | 4 | 0 |

பாரத மணி காரியாலயம்,
34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை.



## பிணியாளர்களுக்கோர் தேறுதல்

மேல் நாட்டு மருந்துகளாலும் ஏனைய நம் நாட்டு மருந்துகளாலும் குணமடையாதிருக்கும் "குஷ்டம்" "படை" "மேகப்பற்று" முதலான சரும வியாதிகளுக்கு எமது

# கந்தகராஜ ரஸாயனம்

உறுதியான பலனைக் கொடுக்கிறது

பவுண்டு விலை ரூ. 60—0—0

வாத வியாதி, மாதவிடாய் சம்பந்தமான கோளாறுகள் முதலான எவ்வித நோய்களையும் எமது மூலிகைகளால் செய்யப்பட்ட ஔடதங்கள் கண்டிக்கின்றன.

முழு விபரங்களுக்கு:

அடியிற்கண்ட விலாசத்துக்கு எழுதுங்கள்:

மானேஜர்,
ஆர்ய வைத்தியசாலை,
கோட்டைக்கல், தென் மலையாளம்





மாத வெளியீடு

ஆசிரியர் : கா. சி. வேங்கடரமணி

காரியாலயம்: 34, அலமேலுமங்காபுரம், மயிலாப்பூர், சென்னை, 4.

வருட சந்தா ரூபா 3 — தனிப் பிரதி அணா 4

மாலை 18 || AUGUST 1947 : சர்வஜித்துஹு ஆவணிமீ || முத்து 2


## பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| **அரசியல்** | | |
| போகிற போக்கில்—கா. சி. வேங்கடரமணி | ... | 47 |
| சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர்—(நெல்லை நேசன்) | ... | 49 |
| கோபுர தரிசனம் | ... | 51 |
| கிழக்கு வெளுத்தது—பி. ஸ்ரீ. | ... | 53 |
| நாளை இந்தியா | ... | 57 |
| **கவிதை** | | |
| இந்திய விடுதலை நாள்—ராய. சொ., மு. மாசிலாமணி, பி.எ. | ... | 52 |
| **சிறுகதை** | | |
| டாக்டரின் மனைவி—ராஜம் ராமமூர்த்தி | ... | 61 |
| சு(த)ந்தா முதலியார்—அ. இ. | ... | 73 |
| **விஞ்ஞானம்** | | |
| அயல் உலக யாத்திரை—பெ. நா. அப்புஸ்வாமி | ... | 69 |
| **சரித்திரக் கதை** | | |
| இராமாயண அரசியல்—எஸ். அம்புஜம்மாள் | ... | 78 |
| **தேசீயம்** | | |
| ஆசியாவும் இந்தியாவும் | ... | 67 |
| அங்கும் இங்கும் | ... | 82 |
| **இதர அம்சங்கள்** | | |
| இரண்டு கச்சேரிகள்—த. நா. நா. | ... | 85 |
| உங்கட்குத் தகவல்கள் | ... | 87 |
| குறிப்புகள் | ... | 88 |
| பத்திரிகை யுலகம் | ... | 89 |
| மதிப்புரை | ... | 92 |



"பாரத மணி"யில் வெளியாகும் கட்டுரைகள் கதைகளில் வெளிவரும் பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள் ; ஒருவரையும் குறிப்பிடுவனவல்ல.


இப்பொழுது
தான் என் சட்டைகள்
உண்மையாகவே
வெளுப்பாகவும்
சுத்தமாகவும்
இருக்கின்றன!
ஆம்—
அது நான்
ஸன்லைட் சோப்
உபயோகிக்க
ஆரம்பித்திருப்
பதனால் தான்!
ஸன்லைட்டால் சுத்தம் செய்யப்பட்ட ஆடைகள் எப்பொழுதும் முன் இருந்ததை விட அதிகச் சுத்தமாகவும் வெண்மையாகவும் காண்கின்றன. ஸன்லைட்டின் தாராளமான நுரை ஒவ்வொரு இழைகளிடையேயும் புகுந்து அடித்துத் துவைக்காமலே—ஜாஸ்தி அழுக்குப்படிந்த பாகங்களிலிருந்துகூட—மலினங்களைப் பூராவும் சுலபமாக அகற்றுகிறது. இச்சோப் மகிழ்ச்சிதரும் புதுமையையும் மணத்தையும் துணிகளுக்குக் கொடுக்கிறது. மேலும் உங்கள் கைகளுக்கு நன்மையளிப்பதையும் காண்பீர்கள்.
SUNLIGHT
SOAP
ஸன்லைட் சோப்
S. 88-23 TM
LEVER BROTHERS (INDIA) LIMITED

# போகிற போக்கில்



'விடுதலை வந்ததும் ஐந்து மணி நேரம் வீணாய்த் தூங்கிப் போய்விட்டோமே' என்று திடுக்கிட்டு ஆகஸ்டு 15-ம் தேதி வெள்ளிக்கிழமை அதிகாலையில் எழுந்திருந்தேன். கிழக்கு இன்னும் வெளுக்கவில்லை. என்னை மிகவும் குதூகலப் படுத்திக் கொள்ள, கூடிய வரையில் முயன்று பார்த்தேன். உத்ஸாகம் வரவில்லை. சர்க்கரை கிடைக்காததால் காப்பியில் இரண்டு அச்சு வெல்லக் கட்டிகளைக் கூடச் சேர்த்துப் பானமாகச் சாப்பிட்டுப் பார்த்தேன். உத்ஸாகமே ஏற்படவில்லை. காப்பிக் கொட்டை . நல்லதாக இப்பொழுது கிடைப்பதில்லையென்று ஏவருக்கும் தெரியும். உத்ஸாகம் மாத்திரம் உயர்தரமாய் நவநாகரிக அரசியலில் புண்பட்ட வாழ்விலே எப்படிக் கிடைக்கும்? மாட்டுக்குச் சரியாக அமையாத நுகத்தடி போல் அரசியல், வாழ்வுக்கே புண்படும் பாரமாய் மாறி விட்டதே! முன்பாரம் பின்பாரம் சரிவர ஒத்து, பாரம் கழுத்தில் உறைக்காமல் சுமை ஏற்ற முடியவில்லையே, அரசியல் - மூட்டை ஏற்றி அடிக்கும் வண்டியிலேயே. அரசியலே, கூலி வண்டிக்காரன் வண்டி ஓட்டுவதுபோல் பொறுப்பற்ற வேலையாய் அல்லவோ நவநாகரிகத்தில் ஏற்பட்டு விட்டது? நூறு வருஷத்திய பிரிட்டிஷ் அரசாட்சியிலிருந்து மேலைநாட்டுக் கசடுகளைத் தானே நாம் கொண்டு களிக்கிறோம்!!

என்ன காரணமோ தெரியவில்லை. மனம் கட்டுக்கடங்காத காளைதானே. எனக்கு, பதினைந்தாம் தேதி காலையில் புன்சிரிப்புக் கூட வரவில்லை. உலகம் முழுவதும் ஒரு பெரிய பொய், புரட்டு, பித்தலாட்டமாய்த் தோன்றிற்று. நமது நாட்டுக்கு உண்மையில் சுயராஜ்யம் கிடைத்த தினமாக எனக்குத் தோன்றவில்லை. தேன் எடுக்கப்போய்த் தேனீ கொட்டி, கடுப்புத் தான் மிச்சம் போல் உணர்ச்சி. சர்க்கார், விடுமுறை நாள் கூலி கொடுத்தும், பிள்ளைகளுக்குப் பெப்பர்மெண்ட் கொடுத்தும், நேரு டில்லியிலிருந்து முழங்கியும், திருவாவடுதுறை ஆதீனம் நேருவுக்குத் தங்கச் செங்கோல் செலுத்தியும் என் மனசில் குதூகலம் பிறக்க வில்லை. நானும் அரசியல் துறையில் முப்பது வருஷம் என் தலைவர்கள் போல் வாயால் கதறிச் சொல்நயத்தால் சேவை செய்தவன்!

* * *

இல்லற வாழ்வின் கசப்பை இந்தச் சுதந்திரம் பிறந்த சிறந்த தினத்தில் என் மனத்தில் ஊட்டி ஏற்றுகிறேனோ என்று தயங்கி, பயந்து, சந்தேகித்து, மகாத்மா காந்தியைப் போல் மேல் துண்டு கூட இல்லாமல் ஊருக்கு மேற்கே இருக்கும்-தர்மபுத்திரர் பேரை வகிக்கும் - தர்மக் குளத்திற்குச் சென்று அவ்விடம் வானத்தை அளாவி ஆண்டவன் அருள் போல்நிற்கும் அரச மரத்தடியில் உட்கார்ந்தேன். சிந்தனையில் ஆழ்ந்தேன். அவைஎல்லாவற்றையும் 'பாரத மணி'யில் எழுதினால், என் நண்பர்கள் என்னை இந்தியாவை விட்டுத் துரத்திவிடுவார்கள்.

எனக்குச் சுலபமாய்க் கிடைத்த புதிய சுதந்திரத்தை இழந்து விடுவேன். ஆகையால் அதையும் காப்பாற்றிக் கொண்டு, மட்டு மரியாதையுடன் எழுதக்கூடியதை மட்டும் எழுதுகிறேன்.

* * *

எதை நாம் ஆகஸ்டு 15-ம் தேதி கொண்டாடுகிறது? நாம் நம்முடைய செயலாலும் வீரத்தாலும் அடைந்த வெற்றியென்ன? செய்து முடித்த காரியம் என்ன? பட்டினி, பசி நாடெங்கும் உலவி வருகிறது. இடிந்த கோபுரத்தில் முளைத்துள்ள செடி கொடிகளை வேருடன் களைந்து விடுகிறேன் என்று கோபுரத்தையே நாம் உண்மையில் இடித்து நிரவி விடவில்லையா? ஒரு துறையிலாவது நாம் ஏற்படுத்திய புதிய கட்டுப்பாடுகள் எவை? ஒரு காளவாயாவது நாமே போட்டுக், கல் அறுத்துச் சுட்டிருக்கிறோமா? வாய்ப்பந்தல் தானே போட்டு இதுவரையில். அறிக்கை - வெற்றி அடைந்திருக்கிறோம்!

பிரிட்டிஷ்காரர்கள் நம்முடைய வீரத்திலா வெளியேறினார்கள்? 'பசுவின் மடியில் பால் வற்றிப்போய் விட்டது; காலைத் தூக்க ஆரம்பித்து விட்டது!' என்று தெரிந்துகொண்டு பிரதம மந்திரி ஆட்லி, 'பசுவைச் சொந்தக்காரனிடம் விட்டுவிடு' என்று கம்பீரமாய் உத்தரவு போட்டுவிட்டார். பிரிட்டிஷ்காரர் நமது செயலால் வெளியேறிருந்தால் அந்தச் செயலே நமக்கு ஒரு பெரிய ரட்சையாயிருக்குமே - நாமே வெட்டின வாய்க்கால் ஆகும். 30 வருஷம் அஹிம்சை-வேதாந்தம் குடிகொண்ட நாட்டில் இவ்வளவு கொலை, கொள்ளை, இரத்த வெள்ளம் ஓடாதே! நாட்டின் இரு புஜமும் துண்டாகியிருக்காதே!

காங்கிரஸின் கோழைத்தனத்திற்குச் சிமந்த புத்திரன் பாக்கிஸ்தானே! ஜின்னா சாகிப்பின் வளர்ச்சிக்கும் அதுவே முக்கிய காரணம். நியாயத்தில் வேர் ஊன்றாத அரசியல், ஆற்றங்கரை ஓரத்தில் வளரும் மரம்போல் தாற்காலிகமாய்ச் செழிக்கும்: அழிவும் நிச்சயம். கேட்டதைக் கொடுத்துப் பழக்கும் செல்லப் பிள்ளையின் துன்பத்தை அனுபவிக்காத தாய் தந்தையார்? அப்படியே அரசியல் துறையில் முஸ்லிம்களைச் செல்லப்பிள்ளையாய்க் காங்கிரஸ் பழக்கினதின் பலனை நாம் எல்லோரும் இன்று நன்றாக அனுபவிக்கிறோம்.

* * *

இந்தியா இரண்டு பட்டு நிற்கும் வரையில் நமது நாட்டில் கொண்டாட்டமேது? விழாவேது? எல்லாம் பொய், புரட்டுத்தான். சமரச வழியிலேயே நியாயத்தை நாட்டி மறுபடியும் ஒரே சமஷ்டியில் (federal union) பாகிஸ்தான் இந்துஸ்தான் இரண்டையும் நாம் சேர்க்க வேண்டியதுதான். இது ஒவ்வொருவருக்கும் கடமை. இதற்குப் 'பாரதமணி' தொண்டு புரியும் என்று நம்புகிறேன். எந்தெந்த வழியில் இந்தச் சேர்க்கைக்கு, (பிரிட்டிஷ் ராஜதந்திரத்தாலும், காங்கிரஸ் கோழைத்தனத்தாலும் பிரிக்கப்பட்ட) நாம் - ஹிந்துஸ்தான்—பாடுபட வேண்டியது என்பதைப் பின் விவரமாய் எழுதலாமென்று எண்ணுகிறேன்.

காவிரிப்பட்டினம், 22-8-47 } கா. சி.வேங்கடரமணி

# சுதந்திர இந்தியாவின் முதல் பிரதமர்

(நெல்லை நேசன்)

இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திலே வீரதளபதியாக விளங்கி, ஆசியாவின் சுதந்திர இயக்கங்களிலும் உலகமக்களின் சுதந்திரப் போராட்டங்களிலும்கூட விசேஷ அனுதாபம் கொண்டிருக்கும் ஜவாஹர்லால் நேரு, 'சுதந்திர இந்தியா' என்று சொல்லப்படும் இன்றைய இந்தியாவில் முதல் பிரதமர் ஆகிவிட்டார்.

ஆங்கிலேயர் போகிற போக்கிலே 'ஜின்னு - பின்னம்' செய்து போவது போதாதென்று, ராஜஸ்தான் திராவிடஸ்தான் முதலான பெயர்களைக் கொண்டு மேலும் துண்டாடப் பார்க்கும் மேதாவிகளும் உண்டு. இந் நிலையில், 'திராவிடஸ்தான்' அளித்த தங்கச் செங்கோலை மந்திரவாதியின் மந்திரக்கோல் போல் உயர்த்தி, 'இதன் கீழே பிரிந்தோடிய பகுதிகளே! விரைந்தோடி வாருங்கள், வந்து ஒன்றுகிவிடுங்கள்' என்ற ஜால வித்தையை ஜவாஹர் செய்து காட்டுவாரானல், இவர் உண்மையாகவே நமது முதல் பிரதமர் என்று மக்கள் - உள்ளங்களிலும் முடிசூட்டப் பெறுவர். ஆனல் மந்திர வித்தை எப்போது, எப்படி நடக்கப்போகிறதோ ?

லட்சிய வீரரான ஜவாஹர் எப்படித்தான் இன்றைய இந்தியாவைச் 'சுதந்திர இந்தியா' என்று ஒப்புக்கொள்கிருரோ ? —1927-ம் ஆண்டில் நம் சென்னைமாநகரில் கூடிய காங்கிரஸில் இந்தியாவின் அரசியல் அமைப்பைத் தயாரிக்கச் சர்வ கட்சி மகாநாடு ஒன்று கூட்டவேண்டுமென்று நிறைவேறிய தீர்மானத்திற்கு இணங்க, அடுத்த ஆண்டுத் தொடக்கத்திலே டில்லியில் அத்தகைய மகாநாடு கூடியது. அந்த விவாதங்களின் பயனுக ஓர் உதவிக் கழகம் (ஸப் கமிட்டி) உருவாயிற்று. ஜவாஹரின் தந்தையார் பண்டித மோதிலால் நேரு தலைமை வகித்தார். அந்தக் கமிட்டி, காங்கிரஸின் காரியக் கமிட்டிக்குச் சமர்ப்பித்த அரசியல் அமைப்புத் திட்டம் 'டொமினியன்' அந்தஸ்தை அடிப்படையாகக் கொண்டதுதான். அந்த 'நேரு அறிக்கை'யையும் பூர்ண சுயேச்சைத் தீர்மானத்திற்கு முரண்பட்டதென்று கண்டித்தவர்களில் இந்த நேரு ஒருவர், அந்நாளில் நாட்டின் பூரண சுதந்திரமே ஜவாஹர் - கொள்கையின் உயிர்நாடி.

காந்தியடிகளின் சமரச முயற்சியைக் கூட ஜவாஹர் எதிர்த்தார், ஆவேசத்துடன். தமது குருநாதராகிய காந்தியடிகளுக்காகவும் ஜவாஹர் தம் உன்னத லட்சியத்தைக் குறைத்துக் கொள்ள விரும்பவில்லை. பிறகு தமது தலைமையில் நடைபெற்ற லாகூர்க் காங்கிரஸில், பூர்ண சுயேச்சையைப் பிரகடனம் செய்வதென்றும், அதை உடனே நிறைவேற்றி வைக்க அஹிம்ஸை முறையில் ஒத்துழையாமையைத் தொடங்க வேண்டும் என்றும் ஒரு தீர்மானம் நிறைவேற்றப் பாடபட்டார். அதுநிறைவேறியதும், 'புரட்சி நீடுவாழ்க' 'ஜவாஹர்லால்கிஜே' என்ற கோஷங்களுக்குக் கிடையே, தம் முகத்தில் புதிய புரட்சி - ஒளிவீச, நள்ளிரவில் கொடிமரத்திலே பூர்ண சுதந்திரக் கொடியைப் பறக்கவிட்டார். அந்த ராஷ்டிரபதிதானு இன்றைய நிலையில், குன்றிய சுதந்திரத்தையும் குறுகிய இந்தியாவையும் 'சுதந்திர இந்திய' என்ற பெயரால் அழைத்து அதற்குப் பிரதமராகவும் வீற்றிருக்கிருர்? அன்று அலைவீசிய ஆசைகளும் கனற்பொறி வீசிய கனவுகளும் இன்று நிறைவேறி

விட்டனவா? உண்மையான சுதந்திரம் அன்று வாய்க்கு எட்டியது, இன்று கைக்கு எட்டியதா? பிரதமர் ஜவாஹர் இன்று அடைந்திருக்கும் பதவியை அன்றைய ராஷ்டிரபதி ஜவாஹர் அங்கீகரித்திருப்பாரா?

'ஊர் ரெண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது!' என்ற பழமொழிக் கிணங்க ஆங்கிலேயர் இந்தியாவைத் துண்டாடி அச் சூழ்ச்சிக்கு இரையானவர்களையும் கொண்டாடப் போகிறார்கள் என்பதை ஜவாஹர் அறியாதவரா? காங்கிரஸ்காரர்கள், 'உள்ளம் மறுக்க, உள்ளங்கை தாழ்ந்து வாங்கிக் கொண்டது!' என்ற ரீதியில்தான் இந்தப் புதிய திட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள் என்பது தெளிவு. ஆனால், இந்த ஏற்பாட்டின் பயனாக விளையும் அரசியல்-மாறுபாடுகள் ஐக்கிய இந்தியாவின் உண்மையான லட்சியத்தைப் பாதிக்கக் கூடுமல்லவா? ஆசியாவில் எப்படியாவது தங்கள் செல்வாக்கு நீடித்து நிற்க வேண்டும் என்ற மனப் பான்மையை இங்கிலாந்து விட்டு விட்டதென்று சொல்லமுடியுமா? உலகத்தின் தலைமைப் பதவியைக் குபேர அமெரிக்காவுடன் பங்கிட்டு அனுபவிக்க வேண்டும் என்ற ஆசையைத் துறந்து விட்டதா? ஆங்கில வல்லரசு? ஆசியாக் கண்டத்தில் தங்கள் ஆதிக்கச் சூழ்ச்சியை வேரூன்றச் செய்வதற்குப் பாக்கிஸ்தான் ஒரு வளர்ப்புப் பண்ணை என்பதை அறியாத ஆங்கில ராஜதந்திரியும் இருக்க முடியுமா? எதிரியான சோவியத் ரஷ்யாவுக்கும் இந்திய யூனியனுக்கும் இடையிலுள்ள பாக்கிஸ்தான், ஹிந்துஸ்தானத் காட்டிலும் ரஷ்யக் கொள்கைகளை வெறுத்துத் தங்களுடன் உறவாடும் என்றே ஜின்னாவை ஆங்கில ராஜதந்திரிகள் தட்டிக்கொடுத்திருக்க வேண்டும் என்பது ஒரு பகிரங்க ரகசியம்தானே? இத்தகைய நிலைமையை நன்குணராதவரா நம் ஜவாஹர்லால்?

இவற்றையெல்லாம் சிந்திக்கும்போது 'சுதந்திர சூரியன் உதயமாகி விட்டது!' என்று ஆனந்தக் கூத்தாட முடியுமா? சூரிய நமஸ்காரம் செய்யத்தான் சூரியன் எங்கே? காவியுடையில் கோடிக் கணக்காகச் சம்பாதிக்கலாம் என்று தீர்மானித்த துறவியின் துறவு போன்றது தான் இங்கிலாந்தின் அரசியல்-துறவும். 'ராஜ - தந்திரம், ஆதிக்க வலை வீச்சு எல்லாம் திட்டப்படி முன்னேறி வருகின்றன! ஜின்னா ஸாகிபை அளித்த ஆண்டவனுக்கு ஜே!' என்று பிரிட்டன் உள்ளுக்குள்ளே கோஷித்துக் கொண்டிருக்க, முரண்டும் முரண்பாடும் கொண்ட சக்திகளால் சக்தியிழந்து இடர்ப்படும் பாரதத்தை ஜவாஹர்லால் எப்படித்தான் உண்மையான சுதந்திரப் பாதையில், ஒற்றுமைப் பாதையில், செலுத்தப் போகிறாரோ?

சந்தர்ப்பம், சகுனம் ஒன்றும் சரியாக இல்லை. எனினும் ஜவாஹரின் தலைமையிலும், காந்தியடிகளின் தலைமையிலும் இந்தியா தன் இடைவிடாத உழைப்பினால் நிச்சயமான சுதந்திரத்தையடைந்து முன்னேற வேண்டும் என்பது தேசபக்தர்களின் பிரார்த்தனை. இவர்கள் கண்களுக்கு, கிழக்கு வெளுத்ததோ, இல்லையோ, தூரவானில் ஏதோ ஒரு வெளிச்சம் தோன்றுகிறது. அது அருணோதயமாக அமைந்து விட்டால்?



# கோபுர தரிசனம்

உண்மையாக விடுதலை பெறுவதற்கு முன்பே விடுதலை திருநாள் கொண்டாடி விட்டோம், ஆகஸ்டு பதினைந்தாம் தேதியில். விடுதலைப் போராட்டம் இன்னும் முடிவு பெறவில்லை. முக்கியமான பிரசினைகள் நம்மை எதிர்நோக்குகின்றன. ‘சுதந்திரக் கோயில் திறக்கவில்லை, கோபுர தரிசனம்தான் கிடைத்திருக்கிறது, - அதுவும் தூரத்திலேதான் தெரிகிறதா?’ என்ற கவலைக்கும் கலக்கத்திற்கும் இடையே நமது சுதந்திரக் கொண்டாட்டமும், அரவிந்த யோகியின் ஆசியும்; கொஞ்சம் ஊக்கமும் நம்பிக்கையும் ஊட்டக்கூடும்.

இந்தியாவின் விடுதலையும் ஐக்கியமும் ஏற்படுத்தக் கூடிய புரட்சியில் அரசியல் - ஞானி அரவிந்தருக்கு அதிக நம்பிக்கையுண்டு. இன்று யோகியாக விளங்கும் நிலையிலும் நாட்டபிமானத்திற்குக் குறைவில்லை; நமக்குக் கிடைத்திருப்பது உடைந்த சுதந்திரம் தான்!’ என்கிறார். பிரிவினையால் இந்தியா பலவீனம் அடைந்துவிட்டதென்று ‘பிரிந்த பகுதிகள் மீண்டும் ஒன்றுபடும்’ என்று நம்புகிறார், ஆசீர்வதிக்கிறார். ‘ஐக்கியம் ஏற்படாவிட்டால் இந்தியா தன் லட்சியங்களை அடைவதில் தடைகள் ஏற்படும்’ என்று கூறும், அரவிந்தர், நமக்கு இறுதி வெற்றி நிச்சயம் என்கிறார். ‘இடையூறுகள் நாம் வெல்ல வேண்டுமென்றே ஏற்படுகின்றன’ என்று, இன்றைய இந்தியாவை உத்ஸாகப் படுத்துகிறார். நமது உத்ஸாகமும் அரவிந்தரின் ஆசியும், இந்தியா விரைவில் புதிய சுதந்திர இந்தியா ஆவதற்கு உரமாகவேண்டும்.



# இந்திய விடுதலை நாள்

ராய. சொ.

பாண்டவர்கள் அரசாண்ட டில்லிநகர்
தனில்இன்று பார தத்தாய்
நீண்டபுகழ் அரியணையில் முடிசூடிக்
கோல்ஓச்சி நேமி தாங்கி
காண்தகுசீர் ஜவகர்லால் வல்லபாய்
ராஜேந்த்ரர் காத்து நிற்ப
ஆண்டுயர்தல் கண்டிட்டோம்! கண்படைத்த
பயன்இன்றே அடைந்திட் டோமே!!

# கொடிப் பாட்டு

(திரு. மு. மாசிலாமணி, பி. ஏ.)

பறக்குது பாரீர்—பறக்குது பாரீர்
அறங்கங்கள் நாவெட்டும்—அவனியில் சிறக்கவே
ஆகஸ்டு பதினைந்தில்—ஆடிப்பூசத்தில் (ப)
எட்டுத்திக்கினும்—இந்தியா எங்கினும்
கொட்டு முழக்கோடே—மூவர்ணக்கொடி (ப)
சுயநல மில்லாச்—சுயராச்சியக்கொடி
தயை அருள் நிறை—தார்மீகக் கொடி (ப)
நன்மார்க்கர் ஆளும்—சன்மார்க்கக்கொடி
சன்மார்க்கம் ஏகும்—தாயின் மணிக்கொடி (ப)
அருட் பெருஞ்சோதி—ஆண்டவன்கொடி
தனிப்பெருங் கருணைத்—தாண்டவன்கொடி (ப)

# கிழக்கு வெளுத்தது

இப்போது நாம் அடைந்திருக்கும் சுதந்திரம் காங்கிரஸின் வெற்றி. எவ்வளவோ இரத்தம் சிந்தி, எத்தனையோ கொலைக்கருவிகளை உபயோகித்துத்தான் பிரிட்டனும் அமெரிக்காவும் ரஷ்யாவும், அசுராவேசம் கொண்டு போராடிய ஜெர்மனியைப் பணிய வைத்தன. அந்த வெற்றியில் பிரிட்டனுக்கு ஒரு முக்கியமான பங்கு உண்டு. அத்தகைய பிரிட்டனையும், காங்கிரஸின் தியாகமும் காந்தியடிகளின் அஹிம்ஸா தர்மமும் பணியவைத்து இந்தியாவுக்குச் சுதந்திரம் தேடிக் கொடுத்தன என்றால், உலக சரித்திரத்திலேயே இது ஓர் அதிசய நிகழ்ச்சியல்லவா ?

## காங்கிரஸின் புதிய கடமை

தேசபக்த வீரர்களும், ஆங்கில அமெரிக்க ரஷ்யப் போர்வீரர்கள்போல் வீரச் செயல்கள் புரிந்தனர் ; எண்ணிறந்த கஷ்ட நஷ்டங்களை அடைந்தனர். எனினும், அராஜகச் செயல்களும் அரசியல் - கொலைகளும் கலகங்களும் நாடெங்கும் நிகழாதபடி தடுத்துச் சன்மார்க்க வழியிலே சுயராஜ்யம் கிடைக்குமாறு செய்த காந்தியடிகளின் அதிவீரச் செயலே நமது சுலப வெற்றிக்கு முக்கியமான காரணம். இத்தகைய வெற்றிக்கு அறிகுறியாகப் புதிய காங்கிரஸ் கொடியை மதித்து,

அமுதமான அன்பினால்
அரசுசெய்யும் கொடியிது !

என்று போற்றவேண்டும்.

இந்த வெற்றியுடன் காங்கிரஸின் வேலை முடிந்துவிட்டதாகக் கருதுவது தவறு. இனிமேல்தான் பாரத ஜாதிக்குப் புத்துயிர் அளிக்கும் தனிப்பெருந் தொண்டினைக் காங்கிரஸ் முன்னிலும் சிறப்பாகச் செய்யவேண்டும். அரசியல் - கிளர்ச்சியில் கொலை கலகம் முதலான ஹிம்ஸை முறைகளைத் தடுத்ததோடு, குறையிரந்து மன்றாடுவது, கெஞ்சி யாசகம் கேட்பதுபோல் அரசியல் - உரிமைகள் வேண்டுவது முதலான மிதவாத மனப்பான்மையையும் போக்கி, ஒரு கௌரவான புது வழியைக் காட்டிய காங்கிரஸ் சுதந்திர இந்தியாவில் தேசப் புனருத்தாரணமும் கிராமப் புனருத்தாரணமும் செய்ய முன்வர வேண்டாமா ? அப்படி முன்வராவிட்டால், கிடைத்த சுதந்திரமும் பயனற்றுப் போகுமே !

கத்தியின்றி ரத்தமின்றி
யுத்தமொன்று வருகுது !

என்று நாமக்கல்-கவிஞர் பாடிய விநோத யுத்தத்திலே கிடைத்த வெற்றி நிலைபெற வேண்டுமென்றால், காங்கிரஸ் இன்னும் பல்லாண்டுகள் ஊக்கமாக உழைத்துத் தொண்டாற்ற முன்வரவேண்டும்.

ஏழைக் கிராமவாசிகளுக்கும் சுதந்திரம், சமத்துவம் என்ற கொள்கைகள் தெரியும்படியாகப் பிரசாரம் செய்த காங்கிரஸ், அந்தக் கொள்கைகளின் பொருளையும் பயனையும் நாடும் நகரமும் நன்கு உணர்ந்து ஒழுகும்படி செய்ய முன் வரவேண்டாமா ? அன்னிய ஆதிக்கத்தை ஒழித்ததுபோல் ஆலயப் பிரவேசம் அளித்துத் தீண்டாமையை ஒழித்த தேசிய மகாசபை, இனி எல்லா வகுப்பினரும் ஸமதர்ம நோக்குடன் முன்னேறும்படி உழைக்க முன் வர வேண்டும்.

காங்கிரஸ் என்பது ஓர் அரசியல் - கட்சி மட்டுமல்ல. “ காங்கிரஸ் இந்திய நாட்டின் உயிர், இந்திய சமூகத்தின் ஆன்மா ” என்று மக்கள் நம்பும்படி அன்னிய ஆதிக்கத்துடன் போராடி வந்திருக்கிறார்கள் காங்கிரஸ் வீரர்கள். ஆகவே இவ்வீரர்களுக்குச் சுதந்திர இந்தியாவிலும் எவ்வளவோ வேலை இருக்கிறது. ஏற்கெனவே அன்னிய அரசுடன் போராடியதுபோல், இனிமேல்

பசிப்பிணி, வறுமை, அறியாமை, செல்வச் செருக்கு முதலான பகைகளுடன் போராட வேண்டும்; பகைமை யுணர்ச்சி இல்லாமலே போராடவேண்டும். காந்தியடிகளின் அஹிம்ஸா தர்ம நெறியிலேயே செல்வச் செருக்கு, கல்விச்செருக்கு, ஜாதிச் செருக்கு முதலியவற்றோடும் போராடி வெற்றி காணவேண்டும்.

## தேசீய இயக்கம் புது வாழ்வியக்கமாக வேண்டும்

"இந்தியர்கள் சுதந்திர விருப்பம் இல்லாதவர்கள், ஜனநாயக தத்துவம் தெரியாதவர்கள்!" என்ற அபவாதம் நீங்கும்படி உழைத்து வந்தது காங்கிரஸ். "ஜனநாயக லட்சியங்களுக்கு அன்னியரல்லர் நம் முன்னோர்" என்ற உண்மையை இந்தியச் சரித்திர ஆராய்ச்சி வெளியிட்டது. அந்த லட்சியங்களை நமது பரம்பரைத் தருமமான சத்தியாக்கிரக வழியில் அடையும்படி தூண்டியது காந்தியடிகளின் தலைமையில் காங்கிரஸ் மகாசபை. இனி இந்தச் சுதந்திர சகாப்தத்திலிருந்து இந்தியாவுக்கு ஒரு புது வாழ்வு கிடைக்கும்படி தொண்டாற்றுவது தேசபக்தர்களின் கடமையாகும்.

இந்தப் புதுமைப் பெரு வாழ்விலே, பாரதியார் சொல்லுகிறபடி, "உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்; வீணில் உண்டு களித்திருப்போரை நிந்தனை செய்வோம்!" எனினும் வகுப்புப் பிணக்குகளையும் கலகங்களையும் தடுப்போம்; சாதிப் பூசல்களை ஒழிப்போம்; இனத் துவேஷத்தைக் களைந்துவிடுவோம். "ஒரு ஜாதிக்கு ஒரு நீதி" என்ற கொள்கையை ஒழிப்பதுடன், ஒரு ஜாதிக்கும் அநீதி இழைக்கமாட்டோம். "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்!" என்பது போன்ற கொள்கைகளால் சன்மார்க்கக் கொலை நிகழாமல், 'ஸர்வ ஜாதிய ஸர்வ சமய ஸமரஸ' அடிப்படையில் ஒரு புதிய பாரத ஸமூதாயத்தை அமைப்போம்.

ருஷ்யா ஒரு புதிய சமூதாயத்தைப் படைக்க முயல்வதுபோல், புதிய இந்தியாவும் முயலவேண்டும். ஆனால் டெல்லி மாஸ்கோவைக் 'காப்பி' அடிக்க வேண்டியதில்லை; அப்படிச் செய்வதும் ஆபத்து. அபிப்பிராய பேதங்களுக்கிடையிலும், முரண்பட்ட சமய சமூதாயக் கொள்கைகளுக்கிடையிலும், சமரசம் காண்பது இந்தியாவின் தர்மம்.

அன்னியப் படிப்பினால் படித்த வகுப்பினரில் பலருள்ளங்களும் அன்னியமயமாகிவிட்டது. சமூக சேவைக்கே பயன்பட்ட கல்வியைப் பொருள் தேடும் சாதனமாக்கிக் கொண்டோம். அரசியல்-அடிமைத்தனத்தைக் காட்டிலும் நாட்டுக்குரிய பண்பாட்டை யிழந்த அன்னியமயமான அடிமைத்தனம் பொல்லாதது, மிகப் பொல்லாதது. இந்தச் சூட்சும அடிமைத்தனமும் ஒழிந்த பிறகுதான், சுதந்திரம் உண்மையான சுதந்திரம் ஆகும்.

## அன்னையின் அழைப்பு

பாரத அன்னை அழைக்கிறாள்: நாற்பது கோடி மக்களையும், வடநாட்டாரென்றும் தென்னாட்டாரென்றும் பேதம் பாராட்டாமல், ஆரியரென்றும் திராவிடரென்றும் பொய்யான இனச் சண்டைகளை மூட்டிவிடாமல், ஒரு புதிய யுகத்தை நிறுவுமாறு அழைக்கிறாள். சமத்துவம்—தெய்வநாட்டத்துடன், ஒழுக்க நலத்துடன், லட்சியப் பெருமையுடன் கூடிய சமதர்மம்—வேண்டுகின்றாள். அன்புப் பெருக்கிலே, வகுப்பு வேற்றுமைகள் கரைந்து போகவேண்டும் என்கிறாள். பசிப்பிணி, வகுப்புப் பூசல், பேராசை, பொறாமை ஆகிய இருள்மேல் இருள் குவிந்த இந்த வாழ்விலிருந்து, ஆனந்த சூரியோதயம் ஆகவேண்டுமென்கிறாள்.

பாரத அன்னையும் தமிழன்னையும் இந்த நிலை அடைவதற்கு உழைக்கும் பொருட்டுக் காங்கிரஸ் வீரர்களில் பலர் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணம் செய்ய வேண்டும். அந்த வீரர்கள் வர்ட்ஸ்வொர்த் (Wordsworth) என்ற ஆங்கிலக் கவிஞர் வருணிக்கும் 'ஆனந்த வீரனை'ப்போல் (The Happy Warrior) நடந்துகொள்ளவேண்டும்.


Toilet Soap
அழகுப் பொக்கிஷம்
அழகு தானே கலை! அதைத்தான் மைசூர் சந்தன சோப் உங்களுக்கு அளிக்கிறது. நின்று மணக்கும் அதன் துல்லிய மணமும் மேனியை அழகு படுத்திக் காப்பாற்றும் அதன் குணமும் ஒப்பு உயர்வற்றவை.
மைசூர் சந்தன சோப்
கவர்ன்மெண்ட் சோப் பாக்டரி பெங்களூர்

## ஆனந்த வீரராவோம் !

ஆனந்த வீரன் ஆனந்தமாகத் தொண்டாற்றுவான். " உள்ளத்தில் பொங்கும் ஆசைகளை அடக்கி ஆண்டுகொள்வான்." (தயவுசெய்து அரசியல் வாதிகள் கவனிக்கவேண்டும்) அவசியமானால் அரசு புரியும் பதவியிலும் இருப்பான். " அப்பதவியை அடைவதாயிருந்தால் சூழ்ச்சியின்றி நேர்வழியில் அடைவான். அடைந்தபின் கண்ணியமாகப் பதவி வகிப்பான். மானத்திற்குப் பழுது வரும் போது உடனே விலகிக்கொள்வான்... தன்னிடம் ஒப்படைத்த கடமையை அறிந்து கோணாமல் பரிபாலிப்பான். கௌரவக் குறைவான காரியம் ஒரு நாளும் செய்யமாட்டான். (மந்திரி சபை கவனிக்கவேண்டும்) பதவியோ, செல்வமோ, செல்வாக்கோ அடையும் பொருட்டு, செய்ய வேண்டியவற்றைச் செய்யாம லிருக்கமாட்டான். (மந்திரி பதவி முதலான ஸ்தானங்களை அடைய விரும்புவோர் கவனிக்க வேண்டும்.) தடையும் எதிர்ப்பும் நேரிட்டுச் சினம் பொங்கும் காலத்திலும், அமைதி நிலையில் தான் கண்ட அறவழியிலேயே பிறழாது நிற்பான். கஷ்டங்களைக் கண்டு கலங்காது நிற்பான். எதிர்பாராத நிலைமைகளையும் தைரியத்துடன் அறவழியிலேயே சமாளித்து நிற்பான்."

வர்ட்ஸ்வொர்த் (Wordsworth) போற்றும் இதே வீரத்தை இந்தியப் பெரியோர்களும் அன்றும் இன்றும் போற்றி வந்திருக்கிறார்கள்.

இத்தகைய ஆனந்த வீரராகக் காங்கிரஸ் வீரர்கள் விளங்கவேண்டும் என்று இந்திய அன்னை எதிர்பார்க்கிறாள்.

—பி.ஸ்ரீ.



# நாளை - இந்தியா

" அம்புலி வேண்டி அழுத குழந்தையின் நிலைதான், சுதந்திரம் வேண்டிக் கிளர்ச்சி செய்த இந்தியாவின் நிலையும்!" என்று ஆங்கிலேயர்கள் கருதியதுண்டு. "என்னிடம் அம்புலி கிடையாது ; கைவசம் இருந்தாலும் கொடுக்கமாட்டேன்; அம்புலியின் நிலைமை இந்தியாவுக்கு ஒத்துவருமோ, என்னவோ ?" என்று இந்தியச் சுதந்திரக் கிளர்ச்சியைக் குறித்து விகடமாகப் பேசினர் ஜான் மார்லி என்ற ஆங்கில அறிஞர். அக்காளில் மிதவாதிகள், " கனடாவைப்போல் இந்தியாவுக்கும் குடியேற்ற நாட்டு அந்தஸ்து அளிக்கலாகாதா ? " என்றுதான் விண்ணப்பஞ் செய்து கொண்டார்கள். அதற்கு விடையாக ஸ்ரீ மார்லி, "கனடாவில் ரோமச் சட்டை அணிந்துகொள்கிறார்கள் - அது அவ்வளவு குளிர்ந்த பூமி. அதே சட்டை தென்னிந்தியாவுக்ுப் பொருந்தமா?" என்று ஒரு கேள்வி போட்டார், ஏதோ ஒரு வெடிக்குண்டைத் தூக்கிப் போட்டதுபோலே. இன்றைய நிலை எவ்வளவு தூரம் மாறிவிட்டது—ஆம், இந்த அணுக்குண்டு - யுகத்திலே !

## சுதந்திர அம்புலி

" கிழக்கு, கிழக்குத்தான். மேற்கு, மேற்குத்தான், இரண்டும் ஒருபோதும் சந்திக்கப் போவதில்லை !" என்பது கிப்ளிங் - கவிதை. கிப்ளிங் - இந்தியாவில் அப்படித்தான். சுதேசியைச் சகோதரனாக நினைக்கும் ஆங்கிலேயனும், சுதேசிக்குத் தன்னைச் சகோதரியாக மதிக்கும் ஆங்கிலப் பெண்ணும் விநோதப் பிரகிருதிகள் ! ஆனால் மகாத்மா காந்தி மௌண்ட்பாட்டன் சீமாட்டியின்தோளை ஒரு கையால் பிடித்துக்கொண்டு வைஸிராயைத் தொடர்ந்து அந்த மாளிகைக்குள் போன செய்தி உலகப் பிரசித்தமாகி விட்டது ; பிரசித்தி பெற்ற ஆங்கில, அமெரிக்கப் பத்திரிகைகள் அந்தப் படத்தையும் விளம்பரப்படுத்தின. அதே வைஸிராய், ஆங்கில ஆதிக்கத்தை ஒழித்த புதிய சுதந்திர இந்தியாவிலும் கவர்னர் ஜெனரலாக வேலை பார்க்க ஒப்புக் கொண்டிருக்கிறார். கிப்ளிங் உயிரோடிருந்தால், மௌண்ட்பாட்டன் பிரபுவை மன்னிப்பாரா ? இந்த நிலையை விநோதம் என்பாரா, விபரீதம் என்பாரா ? " இந்தியா விரும்பிய அம்புலி கிடைத்துவிட்டதே ! அதனால் ஆபத்து ஒன்றும் விளைந்து விடவில்லையே ! தென்னிந்திய வெப்பத்திற்கும் சுதந்திரச் சட்டை பொருத்தமாகி விட்டதே !" என்றெல்லாம் அறிஞர் மார்லியின் ஆவி-வடிவம்தான் ஆச்சரியப்படாதா ?"

எனினும் சுதந்திர அம்புலி கிடைத்ததில் நமக்குத்தான் அவ்வளவு ஆச்சரியமுமில்லை, ஆவேச மகிழ்ச்சியுமில்லை. —தாம்பாளத் தண்ணீரில் பிரதிபலிக்கும் அம்புலியைக் கண்டு அதைப் பிடிக்க முயன்று தண்ணீரை அளையும் குழந்தைக்கு உள்ள குதூகலமும் இன்று இல்லை நமக்கு. கொடியைப் பறக்க விடுகிறோம் ; விரைவில் இது பூர்ண சுதந்திரக் கொடியாகப் பறக்கும் என்றும் நம்புகிறோம். " தேசபக்தர்களின் தியாகக் கனி இது; மகாத்மாவின் அருந்தவம் பலித்தது !" என்றெல்லாம் சொல்லுகிறோம். எனினும் உள்ளத்திலே மகிழ்ச்சியைக் காட்டிலும் பொறுப்புணர்ச்சியும் கவலையுந்தான் அதிகமா யிருக்கின்றன. ஏன் இப்படி ?

## ஒருமையும் ஒற்றுமையும்

" சுதந்திர இந்தியா எதிர்பார்த்தபடி பிறக்கவில்லை ; ஒரு விநோத இரட்டைப் பிறவியாகப் பிறந்திருக்கிறது !" என்ற கிலேசம்தானா? "சென்ற நூற்றைம்பது ஆண்டுகளாக வெள்ளையர்கள் மேற்கொண்ட பிரித்தாளும் சூழ்ச்சி பலித்து விட்டதே ! இதனால் என்ன விபரீதம் விளையுமோ ?" என்ற பயம்தானா ?

பருத்தி நூல்களுக்கு பிரதான ஸ்தாபனம்

# மதுரை மில்ஸ் கம்பெனி லிட்.

மதுரை — தூத்துக்குடி — அம்பாசமுத்திரம்

5,00,000 நூற்கும் கதிர்கள். நெம்பர் 80 வரை நூல்கள்

எங்களுடைய விசேஷமான நூல்கள் : ஒத்தை நூல், இரட்டை நூல், பனியன் நெசவுக்கேற்ற கோன் நூல், மில் நெசவுக்கேற்ற சிஸ் நூல், முறுக்கேற்றிய நூல்.

நாங்கள் சப்ளை செய்வது : கைத்தறி, இயந்திரத் தறி, பின்னல் தறிகளுக்கு வேண்டிய காரிக்கன் நூல்கள், இயந்திர நெசவுக் கேற்ற வார்ப்பு நூல்கள் கனத்த வெப்பிங், கான்வாஸ் முதலியவைகளுக்கேற்ற மடக்கு இரட்டை நூல்கள், மற்றும் பின்னல் இயந்திர நெசவுக் கேற்ற மிருதுவான சன்ன நூல்கள், எங்கள் எகிப்திய பருத்தி நூல்கள் இறக்குமதியாகும் நூல்களைப்போல் எல்லா வகையிலும் கீர்த்தி பெற்றவை.

நாங்கள் நூற்பதைத் தவிர நெய்வதில்லை.

✻

மானேஜர்கள் :

ஏ. & எப். ஹார்வி லிமிடெட்,

ம து ரை.

"வெள்ளையர் வருவதற்குமுன் 'இந்தியாவின் ஒருமை' என்பதெல்லாம் அரசியல் - துறையில் இல்லை; பண்பாட்டிலும் இந்து சமய ஞானத்துறையிலும் தான். வெள்ளை ஆதிக்கத்தின் அதி முக்கியமான பயன் அரசியல் - ஒருமை. அதையும் கெடுத்துவிட்டு வெளியேறுகிறான் வெள்ளைக்காரன்!" என்று வருந்துவோர் உண்டு. "கோபமாகவும் பகைமையுணர்ச்சியுடனும் பிரிந்திருக்கும் பாக்கிஸ்தான் நம்முடன் ஒத்துழைக்கும் என்பது வீண் கனவு" என்று வாதிப்போர் உண்டு. இத்தகைய வாதங்களிலிருந்து நாம் ஒன்று தெரிந்துகொள்ள வேண்டும் : அதாவது சிற்றத்துடனும் பகைமையுடனும் பிரிந்தவர்களை வலுக்கட்டாயமாய் ஒன்றுபடச் செய்வதால் ஒற்றுமை ஏற்படாது, ஒருமை வரவே வராது! அவர்கள் அன்புடனும் இதய ஒருமையுடனும் மீண்டும் நம்மைச் சேர்ந்து கொள்ளும்படி நாம் நடந்துகொள்வதே நலம். அந்த நாள்வரை நமது சுதந்திரம் பூர்ணமாக முடியாது.

## ஸோஷலிஸம், கம்யூனிஸம், காந்தீயம்

உடைந்த இருதயங்களை ஒன்றுபடுத்தும் மருந்து தேடும்போது, வைத்தியர்களுக்கிடையே அபிப்பிராய பேதம் ஏற்படுகிறது. "ஸோஷலிஸம் என்ற சமுதாயக் கொள்கை தான் நல்ல மருந்து. அதுவே பிரிந்தவரைச் சேர்த்து வைத்து இந்தியாவை ஒன்றுபடச் செய்யும்; ஏகாதிபத்தியச் சுரண்டலோடு முதலாளிகளின் சுரண்டலையும் ஒழித்து விடும்; சமூக ஏற்றத் தாழ்வுகளை அறவே களைந்துவிடும்; அரசன் என்றும், ஆண்டி என்றும், பார்ப்பான், பஞ்சமன் என்றும், ஏழை,பணக்காரன் என்றும் உள்ள வேற்றுமைகளுக் கெல்லாம் ஒரு மருந்து ஸோஷலிஸம்தான். நாட்டைத் தொழில் மயமாக்கி விரைவில் பொருளாதார நிலையை உயர்த்தி, மிருகப் பிராயமாக வாழ்ந்துவரும் மக்களுக்கு உரிய பண்பாட்டை அளித்துச் சுதந்திர இந்தியாவை ஒன்றுபட்ட சுபிட்ச இந்தியாவாகச் செய்வதற்கு ஸோஷலிஸம் ஒன்றே வழி" என்று ஸோஷலிஸ்டுகள் வாதிக்கிறார்கள். கம்யூனிஸ்டுகள் என்ற பொது உடைமைக்காரரோ, ருஷ்யாவின் அரசியல் - தத்துவம்தான் உண்மையாக இந்தியாவுக்கு விமோசனம் அளிக்க உதவும் என்கிறார்கள். காந்திபடிகளின் அஹிம்ஸை முறையிலும் சமரசச் சன்மார்க்க முறையிலும் அவர்களுக்கு நம்பிக்கை கிடையாது.

காந்தியடிகளோ, "அஹிம்ஸையைப் படையாகக் கொண்டு வளரும் சமுதாயமே நாளை யுலகம்" என்கிறார். வறுமையை ஒழிப்பதற்கும், போரை ஒழிப்பதற்கும் ஒரு துளி இரத்தம் சிந்த வேண்டியதில்லை என்பது காந்தியடிகளின் கொள்கை. சமய உணர்ச்சியை ஒழித்துவிடலாம் என்ற கம்யூனிஸ்டு - கொள்கையை மகாத்மா முற்றும் மறுக்கிறார்.

கடவுள் - நம்பிக்கை எப்போதும் அவசியமானது; சமுதாயத்தின் ஆழத்திலே வேரூன்றியிருப்பது; இதைப் பறித்தெறியும் முயற்சிகளெல்லாம் வீண் முயற்சிகளே என்பது மகாத்மாவின் தேர்ந்த கொள்கை. கடவுள் - நம்பிக்கையைப் பெருக்கிக் கொள்ளவேண்டும், ஆழமாக்கிக்கொள்ள வேண்டும்; எத்தகைய அறிவாளியும் பணிவுடன் கடவுளை நோக்க வேண்டும் என்று வற்புறுத்துகிறார் காந்தியடிகள். இத்தகைய நம்பிக்கையுடன் சிருஷ்டியாகும் நாளையுலகம் ஒரு புதிய தூய நல்லுலகமாக விளங்கும் என்பதும், அப்போது போரும் போட்டியும் பூசல்களும் பிணக்குகளும் நிறைந்த இன்றைய உலகம் ஏதோ ஒரு கெட்ட கனவுபோல்தான் நினைத்துக் கொள்ளப்படும் என்பதும் காந்தியடிகளின் நம்பிக்கை.

மகாத்மாவின் அரசியல் - கொள்கை நமது நாகரிகப் போக்கிற்கும் பண்பாடுகளுக்கும் பொருத்தமானது. போரும் போட்டியும் ஹிம்ஸையும் மனித சுபாவத்திற்கு இசைந்தவைதான் என்றால், மூன்றுவது உலக மகாயுத்தம் இன்றைய நாகரிகத்தை அடியோடு அழித்துவிடக் கூடும். அணுக்குண்டுகளையும் அவற்றைக்

காட்டிலும் பயங்கரமான நோய்க்கிருமிகளையும் விஞ்ஞானப் போராற்றலையும் படைத்துணையாகக் கொண்டு நடைபெறப்போகும் புதிய மகாயுத்தத்திலே மனித நாகரிகம் தப்பிப் பிழைக்கக் கூடும் என்பது வீண்கனவு தான். ஆகவே மகாத்மாவின் அஹிம்ஸா தர்ம - ஸத்தியாக்கிரகப் பெரு நெறியிலே ஞாலயுலகத்தை ஒரு சிறந்த நல்லுலகமாகப் படைக்க முயல்வதுதான் அறிவுடைமைக்கு அழகு.

அத்தகைய உலகில் "எல்லோருக்கும் உணவு, எல்லோருக்கும் உழைப்பு, எல்லாருக்கும் ஒரு நீதி" கிடைக்கும் என்கிறார் காந்தியடிகள். "அந்த உலகம் கவிஞர்களின் கனவு - லோகம் தான்; அந்த ராமராஜ்யம் அதிதூரத்தில் நட்சத்திரம்போலக் கண்சிமிட்டி மினுமினுக்கும் ஒரு லட்சியபூமிதான்!" என்று லௌகிக புத்திசாலிகள் கூறுவதை மகாத்மா ஒப்புக்கொள்ளவில்லை.

இன்றே, இப்போதே அவ்வுலகத்தை அடைய முயலலாம், முயல வேண்டும் என்கிறார் காந்தியடிகள். அஹிம்ஸா தர்மநெறியைத் தனிமனிதர்கள்—முக்கியமாகப் பக்தர்களும் ஞானிகளும்—உலகத்தின் பல பகுதிகளிலும், பலவேறு காலங்களிலும் கையாண்டு பார்த்திருக்கிறார்கள். நமது நாட்டில் பௌத்த சங்கங்களும் ஜைனத் துறவிகளின் கூட்டங்களும் அஹிம்ஸா தர்ம நெறியைப் பரீட்சித்துப் பார்த்திருக்கின்றன. அத்தகைய நெறியை அரசியல் கிளர்ச்சியில் நமதுநாட்டில் பலரும் பரீட்சித்துப் பார்க்கும்படி வழிகாட்டியவர் மகாத்மா காந்தி. பல தவறுகளுக்கிடையே இவரது பரீட்சை ஒருவாறு வெற்றியடைந்து விட்டது என்றுதான் சொல்ல வேண்டும்.

அரசியல் - கொலைகளையும் அராஜகச் செயல்களையும் தடுத்து, ஆங்கில அறிஞர்களின் உள்ளத்தையும் உலக நல்லறிஞர்களின் இதயத்தையும் வசிகரித்தது காந்தி - யடிகளின் மார்க்கம். சுதந்திரத்திற்காகப் போராடிய, இன்றும் போராடுகிற, நாடுகளுக்கும் தற்கால இந்தியாவுக்கும் உள்ள வேற்றுமையை அறியாதார் யார்? இந்தியாவின் அரசியல் - வெற்றி ஸாராம்சத்தில் காந்தியடிகளின் அஹிம்ஸாதர்ம வெற்றியே.

## உண்மையான சமதர்மம்

அஹிம்ஸா தர்மத்திலிருந்து தான் உண்மையான ஸமதர்மம் மலர்ச்சி பெறும் என்று நம்புகிறார் காந்தியடிகள். "எவ்வுயிரும்—கையின் வளைத்து வயிற்றடக்கும் கவந்தன்" என்று கவிஞன் வருணிக்கும் அத்தகைய ஸமதர்மமன்று காந்தியடிகள் விரும்புவது. பட்சபாதமில்லாமல் எல்லா உயிர்களையும் சமமாகக் கையால் வளைத்துத் தன் வயிற்றில் அடைத்துக் கொண்டானும் கபந்தன். "பார்ப்பான், அல்லாதவன்; கறுப்பன், வெளுப்பன்; யானை, பூனை" என்ற வேற்றுமையின்றி எல்லா உயிர்களையும் பட்சித்த கபந்தேசுவரன் வயிற்றில் உதயமாயிற்றே சமதர்மம், அந்தச் சமதர்மம் ஒருபோதும் வரப்போவ தில்லை, காந்தியடிகளின் அஹிம்ஸாதர்மப் பெருநெறியிலே!

கலகங்களாலும் புரட்சிகளாலும், இரத்தத்தைப் பெருக்குவதாலும் செல்வர்களின் செல்வங்களைப் பறித்துக் கொள்ளும் 'முறை'யைக் காந்தியடிகள் ஒப்புக்கொள்ளவில்லை. பெருஞ்செல்வத்தைப் படைத்து நிர்வகிக்கும் அந்த ஆற்றலும் சமுதாயத்திற்கு அவசியமானது என்பது காந்தியடிகள் அபிப்பிராயம். தமது நியாயமான தேவைகளுக்கு வேண்டிய பகுதியை அனுபவித்துக்கொள்வதுடன், பாக்கிப் பொருளெல்லாம் சமுதாயத்திற்கு உபயோகமாகும்படி செல்வர்கள் அச்செல்வத்திற்குத் தர்மகர்த்தர்கள் ஆகவேண்டும் என்கிறார் மகாத்மா காந்தி.

இந்தக் கொள்கையில் ஒவ்வொருவனும் சமுதாய தர்மத்தின் வேலைக்காரன்தான். சமுதாய தர்மத்தைப் பரிபாலிக்கவே பொருள் தேடுகிறான், செலவு செய்கிறான். பரந்த, பூர்ணமான சமய உணர்ச்சியுடன், ஆழ்ந்த உறுதியான பக்தியுடன் சமுதாயப்பணி ஆற்றும்

# டாக்டரின் மனைவி

ராஜம் ராமமூர்த்தி

டெலிபோன் ரிஸீவரை டக்கென்று கீழே வைத்தாள் ராதா. அவள் முகத்தில் எள்ளும் கொள்ளும் வெடித்தன.

"டாக்டர் மாமா! கொஞ்சம் சீக்கிரமா ஆத்துக்கு வரேளா? அம்மாவுக்கு ரொம்ப உடம்பு சரியாயில்லே, வலிக்கிறதேன்னு கத்தரா? எனக்குப் பயமாயிருக்கு மாமா! அப்பாவோ இன்னம் ஸ்கூலிலே இருந்து வரவே இல்லே. பாட்டிகூட ஒன்னு அழறா, கொஞ்சம் தயவுபண்ணி சீக்கிரம் வரேளா?" என்று உருக்கமான மெல்லிய குரலில் அந்தச் சிறு பெண் கூறியது கல்மனத்தையும் கரைத்திருக்கும். ஆனால், ராதாவுக்கோ கோபம்தான்.

"உம்" என்ற உறுமலுடன் டெலிபோனை நிறுத்திய அவள், "வருவாரடியம்மா வருவார், உங்கள் டாக்டர் மாமா! அவருக்கு அதைவிட வேலை? உங்கள் வீட்டு வேலைக்காரன் தானே அவர்?" என்று கீழே இறங்கினாள்.

ராதா ஹாலை யடைந்த சமயம் கடுமையான உழைப்பிற்குப் பிறகு சோர்ந்து வீட்டுக்கு வந்த கிருஷ்ணன், "உஸ், அப்பாடி!" என்று அருகிலிருந்த சாய்வு நாற்காலியில் சாய்ந்து கொண்டார்.

இடுப்பிலே பச்சைநிறப் பட்டுப்புடவை, கழுத்திலே வைர நெக்லெஸ், தலையிலே அழகும் மணமும் நிறைந்த கதம்பம், கைகளில் வைர வளையல்கள்—தம்முன் காட்சியளித்த தம் மனைவியைக் கடைக்கண்ணால் ஒருமுறை பார்த்தார் டாக்டர் கிருஷ்ணன். உணர்ச்சியற்ற வரண்ட குரலில் அவர், "எங்கேயாவது வெளியில் போகப் போகிறாயா, என்ன?" என்று கேட்டார்.

"என்ன அலட்சியம்! ஹூம், வெளியிலே போனால்தான் அலங்கரித்துக் கொள்ளவேணும்; வீட்டிலிருந்தால் அழுது வடிய வேணுமாக்கும்?" என்று மனசுக்குள்ளேயே பொருமினாள்.

சிற்றுண்டித் தட்டை அவர் பக்கமாய்த் தள்ளியவாறே, அவள் வலுக்கட்டாயமாகச் சிரிப்பை வரவழைத்துக்கொண்டு, "என்ன, அன்றைக்கு நான் சொன்னதை மறந்து போய்விட்டீர்களா? அண்ணாவுக்கும் மன்னிக்கும் இன்று நம் வீட்டில் விருந்து இல்லையா? அண்ணாவின் சிநேகிதர்கள்கூட யாரோ வருவதாகச்சொல்லியிருக்கிறான். சமையலெல்லாம் செய்தாகிவிட்டது. உங்களுக்காகத்தான் இத்தனை நேரம் வழிபார்த்துக்கொண்டிருந்தேன். நீங்களும் இன்று சீக்கிரமே வந்துவிட்டீர்கள். இதோ அவர்களும் வந்துவிடுவார்கள்" என்று கூறினாள். கிருஷ்ணன் பதிலே சொல்லவில்லை,

---

விருப்பம் உண்டு. இத்தகைய சமுதாயத்திற்கு, "கடவுளே உண்மை, உண்மையே கடவுள்" என்ற கொள்கை இன்றியமையாதது.

"இந்த நவநாகரிக யுகத்திலும் இப்படிப்பட்ட கொள்கையை ஒப்புக்கொள்ள முடியுமா?" என்று வாதிக்கிறவர்கள் நமது நாட்டிலும் உண்டு. இந்த வாதத்திற்கு, "சத்துருக்களையும் நேசிக்க வேண்டும். அன்பினால் பகைமையை வென்றுவிடலாம். அதர்மத்தோடு ஒத்துழையாமை செய்யவேண்டும்" என்ற காந்திய அரசியல் ஒன்றே, போர்களாலும் பேராசைகளாலும் களைத்துப் போன உலக - இதயத்தை வசிகரிக்கும். (அந்நாள் அதிதூரத்தில் இல்லை). இந்தியாவின் இதயத்தையோ, மேலும்மேலும் விசேஷமாக வசிகரிக்கும்" என்றுதான் பதில் சொல்ல முடியும்.

மௌனமாகச் சிற்றுண்டியைக் காலி செய்யலானார்.

கோட்டை மாட்டிக்கொண்டு வெளியில் கிளம்பத் தயாராய் நின்ற தன் கணவனைப் பார்த்தாள் ராதா. அவளுக்கு அழுகையே வந்துவிடும் போலாகி விட்டது. டில்லிக்குப் பெரிய உத்தியோகமாய் மாற்றிப்போகும் அருமை அண்ணாவுக்கு அவள் விருந்து நடத்த எவ்வளவோ பாடுபட்டு ஏற்பாடு செய்திருந்தால், இவர் வீட்டில் இருந்து அதை நன்றாக நடத்துவதை விட்டுவிட்டு இப்படி வெளியில் போகவேண்டுமென்று பறக்கிறாரே? 'கேஸ் கேஸ்' என்று எப்போதும் இவருக்குக் கேஸ் ஞாபகம் தானா? மனைவி, பந்துக்கள் யாரைப் பற்றியும் சிந்தனையே கிடையாதா? வீட்டு எஜமானர் இல்லாமல் நடக்கும் விருந்து சோபிக்குமா? ராதாவுக்குத் துக்கம் தூக்கிக்கொண்டு வந்தது.

துக்கம், கோபம் எல்லாவற்றையும் அடக்கிக்கொண்டு, அவள் மெதுவான குரலில், "அப்படி என்ன அவசரக் கேஸ் இன்றைக்கு? காட்டுப்பட்டி ஜமீன்தாரிணிக்கு உடம்பு சரியாயில்லை என்று சொன்னீர்களே, அவளைப் பார்க்கவா போகிறீர்கள்?" என்று கேட்டாள்.

கிருஷ்ணன் அவளை முறைத்துப் பார்த்தார். "ராதா, நீ கேட்பது வேடிக்கையாயிருக்கிறதே. உன் உள்ளெண்ணம் எனக்குப் புரியாமல் இல்லை. பணக்காரர் வீட்டுக் கேஸானால் நான் போகலாம். விருந்துக்கு இல்லாவிட்டால்கூடப் பாதகமில்லை. ஏனென்றால், நீ வருகிறவர்களிடமெல்லாம், 'அவர் இருக்கவேணுமென்றுதான் பார்த்தார். திடீரென்று அர்ஜென்ட் கால் வந்துவிட்டது. ஜமீன்தாரிணிக்கு ரொம்ப ஸீரியஸாப் போய்விட்டதாம். உடனே "டிலே" பண்ணாமல் கிளம்பிவிட்டார்' என்று ஆங்கிலமும் தமிழும் மணிப்பிரவாளமாகக் கலந்து பெருமையடித்துக்கொள்ளலாம் என்று நினைக்கிறாய். ஆனால், எனக்கு ஆள் பெரிதில்லை. இப்போது நான் போவதுகூட ஒரு ஏழை வாத்தியார் வீட்டுக்குத்தான். வீட்டிலே பதின்மூன்று வயதுடைய அவருடைய பெண்ணையும் கிழ மாமியாரையும் தவிர வேறு பெரிய ஆட்களில்லை. மற்றக் குழந்தைகள் சிறு குழந்தைகள். அவருக்கு லீவு கொடுக்க முடியாது என்று சொல்லிவிட்டார்களாம் மேல் அதிகாரிகள். அந்த அம்மாளின் நிலைமையோ மோசமாயிருக்கிறது. அவசரமென்றால், எனக்குச் சொல்லியனுப்பக் கூட அவர்கள் வீட்டுக்கு அருகில் டெலிபோன் கிடையாது. அங்கிருந்து அரை மைல் தூரத்தில், அவர்களுக்குத் தெரிந்தவர் வீட்டுக்கு வந்துதான் என்னைக் கூப்பிட முடியும். இன்று சாயங்காலமே என்னைக் கூப்பிடும்படியாகச் சொன்னேன். ஏனோ, கூப்பிடக் காணோம். உனக்கு அவசியமாகத் தோன்றினாலும், தோன்றாவிட்டாலும் என் கடமையிலிருந்து நழுவ நான் விரும்பவில்லை. என் வரவுக்காக அங்கே ஒரு ஆத்மா துடித்துக்கொண்டிருக்க, இங்கே என்னால் விருந்து சாப்பிட்டுக்கொண்டு குஷியாக இருக்கமுடியாது" என்று கண்டிப்பாகக் கூறிய கணவன் வார்த்தைகளைக் கேட்டதும் ராதாவுக்குத் திக்கென்றது.

'சற்று நேரத்திற்குமுன் அந்தப் பெண் கூப்பிட்டதைச் சொல்வதா, வேண்டாமா?' என்று அவள் யோசித்துக் கொண்டிருக்கையில் விருந்தாளிகள் வந்துவிட்டனர். கிருஷ்ணனால் மைத்துனனை மீறிக்கொண்டு வெளியே போக முடியவில்லை. 'டெலிபோன்மணி அடிக்கிறதா?' என்று அடிக்கடி கவனித்தபடியே எப்போது இவர்கள் தொலைவார்கள் என்றுகூடத் துடித்துக்கொண்டிருந்தார். உள்ளே சாப்பாடு, அரட்டைக் கச்சேரி, பிரிவுபசாரம் எல்லாம் நடந்து, வந்தவர்கள் வீட்டைவிட்டுப் போவதற்கும், கடிகாரம் மணி பதினொன்றடிப்பதற்கும் சரியாக இருந்தது. டெலிபோன் மணியும் கணகணவென்று அடித்தது.

டெலிபோன் அறையிலிருந்து வெளியே வந்த கிருஷ்ணனின் முகம் குங்குமம்போல் சிவந்திருந்தது. கண்களில் கோபக்கனல் வீசியது. விருந்தாளிகளை அனுப்பிவிட்டு ஒய்யாரமாக சோபாவில் சாய்ந்துகொண்டு சிரம

பரிகாரம் செய்துகொண்டிருந்த ராதாவின் தோள்களைப் பிடித்து ஒரு உலுக்கு உலுக்கினார்.

"பாவி ! என்ன காரியம் செய்திருக்கிறாய் நீ? அந்த வாஞ்சிநாதையர் பெண் சாயங்காலமே கூப்பிட்டாளாமே. அதை ஏன் என்னிடம் சொல்லவில்லை? சண்டாளி! இப்போது அந்த அம்மாவுக்கு மிகவும் ஆபத்தாகப் போய்விட்டதாமே? சீ, நீயும் ஒரு பெண் ஜன்மமா? ஏழையானால் என்ன, பணக்காரனானால் என்ன, உயிர் எல்லோருக்கும் ஒன்றுதானே! அந்த உத்தமி, பாவம்,....... அத்தனை பாவமும் மகா பாவியான உனக்குத்தான்!" என்றெல்லாம் தன்மேல் சொல்லம்புகளைத் தொடுக்கும் கணவனை ஏறிட்டுப் பார்க்கவும் ராதாவின் கண்கள் கூசின. பயத்தினாலும் வெட்கத்தினாலும் அவள் உடல் நடுங்கியது.

நெற்றியில் முத்துமுத்தாக வேர்வை துளிக்க, மருண்ட கண்களுடன் நடுங்கியபடியே நிற்கும் ராதாவின் தோற்றம் கிருஷ்ணனுடைய மனத்தை ஒரு சிறிதும் இளகச் செய்யவில்லை. அவசரம் அவசரமாக வேண்டிய சாமான்களைத் தம் சூட்கேஸில் திணித்துக்கொண்ட அவர், "உம், என்ன மலங்க மலங்க நிற்கிறாய்? நீயும் இன்றைக்கு என்னுடன் வரவேண்டியதுதான். நர்ஸ் ஒருத்தியும் காணோம். அந்த வேலையை நீதான் செய்யவேண்டும். உம், கிளம்பு" என்று மிரட்டினவர், எதையோ நினைத்துக் கொண்டவர்போல் சட்டென்று, "ஓஹோ, இந்த ஆடம்பர அலங்காரத்தோடேயே கிளம்பி விடுவாயோ? இப்போது நாம் போவது பெரிய விருந்துக்கல்ல. வேறு சாதாரண உடையில் வா. இதோ ஐந்து நிமிஷங்களில் வந்துவிடு" என்று கெடுபிடி செய்தார்.

கோபம், வருத்தம், பயம், பச்சாத்தாபம் என்ற பல உணர்ச்சிகளும் இதயத்தை வாட்ட, கண்ணீர் கன்னங்களை நனைக்க, உடல் வெட வெடவென்று நடுங்க, வந்து ஏறிக்கொண்டாள் ராதா. – விர் எனப் பறந்து சென்றது கார்.

வெவ்வேறான எண்ணங்களில் மூழ்கிக் கிடந்தனர் ராதவும் கிருஷ்ணனும்.

"இந்த மூதேவியால் வந்த தவறுதானே இவ்வளவும்; பாழும் விருந்திற்காக என்னை ஏமாற்றி நிறுத்திவிட்டாளே! இருக்கட்டும். அந்தம்மாள் மட்டும் பிழைக்காமல் போனால், இனி இவளுக்கும் எனக்கும் முகாலோபனம் கிடையாது! அவ்வளவு அகம்பாவமா இவளுக்கு?" என்று கறுவிக்கொண்டார் கிருஷ்ணன்.

"வேலையென்ன இவருக்கு? ஊரிலிருக்கிற ஏழைகளையெல்லாம் காப்பாற்றக் கங்கணம் கட்டிக்கொண்டிருக்கிறாரா? ......இருந்தாலும், நான் அந்தப் பெண் கூப்பிட்டதை இவரிடம் சொல்லியிருக்கத்தான் வேணும், சொல்லாதது தப்பு. ஆனால், நான் என்னத்தைக் கண்டேன், அது இவ்வளவு விபரீதமாய்ப் போய் விடுமென்று? இவருக்கோ கோபம் வந்தால் தலைகால் தெரியாது. மூன்றும் மனிதர் எதிரிலேயே வாயில் வந்தபடி பேச ஆரம்பித்து விடுவார். ஈசுவரா! எப்படியாவது அந்தம்மாள் பிழைத்து விடும்படி செய்யேன். அவள் மட்டும் பிழைத்துவிடட்டும். அப்புறம் இவர் என்னைத் திட்டின திட்டுக்கெல்லாம் பதிலுக்குப் பதில் நான் இவரைக் குத்திக் காட்டிக்கொண்டேயிருக்கமாட்டேனா?" என்று எண்ணியபடி இருந்தாள் ராதா.

காரை விட்டிறங்கிச் சந்து பொந்துகளிலெல்லாம் நுழைந்து கடைசியாக வாஞ்சிநாதையர் வீட்டை அவர்கள் அடைந்தபோது, மணி பதினொன்றரைதான் ஆகியிருந்தது; அவ்வளவு வேகமாக வந்துவிட்டார்கள்.

பிறகு நடந்ததெல்லாம் ராதாவுக்கு ஏதோ கனவில் நடப்பதுபோலவே இருந்தது. கட்டிலில் படுத்திருந்த மெலிந்த உருவத்தைப் பார்த்ததுமே பகீரென்றது. "இவளாவது, இந்தக் கஷ்டமான கேஸில் பெற்றுப் பிழைப்பதாவது? கடைசியில் நான் பழிகாரிதானா?" என்று தவியாய்த் தவித்தாள். "என்ன, மலைத்துநிற்கிறாய்? சீக்கிரம் இந்த ஸ்டவ்வைப் பற்றவை" என்ற அதட்டல் அவளை இவ்வுலகிற்குக் கொண்டுவந்தது.

இதற்குப் பிறகு சில நிமிஷங்கள் அவள் ஒரு யந்திரமாக இயங்கினாள்

ராதா. "இதைச் செய்" "அந்தப் புட்டியை எடு" "அந்த விளக்கைப் பிடி" "இந்தக் கைக்குட்டையை எடு" "என் மாதிரி இப்படிக் கட்டிக்கொள், மூக்கையும், வாயையும் மறைக்கும்படி" "அந்த மருந்தை இப்படிக் கொண்டு வா" என்றெல்லாம் கிருஷ்ணன் அவளுக்குக் கட்டளைகள் பிறப்பித்த வண்ணமாக இருந்தார். ஒன்றிரண்டு தடவை தடுமாறிப் போய்விட்டாள் ராதா. உடனே, கிருஷ்ணனின் கண்கள் அவளை உருத்துப் பார்த்தன; "மூதேவி, ஏற்கெனவே எவ்வளவோ நேரமாய் நிலைமை மிக மோசமாகி விட்டிருக்கிறது. நீ வேறு இன்னும் தாமதம் செய்து புண்ணியம் கட்டிக்கொள்கிறாயா?" என்று அவர் பேசாத பேச்சை அந்தக் கண்கள் பேசிவிட்டன. அவ்வளவுதான்; ராதாவின் தடுமாற்றம், திகில் எல்லாம் பறந்துபோய்த் தன்னம்பிக்கையும் தைரியமும் தெளிவும் அவளிடம் குடிகொண்டன. சேவையில் இன்பம் என்பதை இன்றுதான் அவள் தன் வாழ்க்கையிலேயே அனுபவித்துணர்ந்தாள்.

கிருஷ்ணனையும் இன்றுதான் 'டாக்டர்' என்ற முறையில் கண்டாள். அவள் நெஞ்சு பெருமிதத்தாலும் வியப்பாலும் விம்மியது. எவ்வளவு நைச்சியமாகப் பேசி அந்தம்மாளுக்கு மயக்க மருந்தை உள்ளே செலுத்தினர். நம்பிக்கையே அற்றிருந்த அவளுக்கு எவ்வளவு சாதுரியமாக உத்ஸாகத்தை ஊட்டினர். பிரக்ஞையற்றுச் சவம்போல் பார்க்கப் பரிதாபமாய்க் கிடந்த அந்த உடலில் என்ன லாகவமாய் அந்த ஆயுதங்களை உபயோகித்தார்.

பல்லைக் கடித்துக்கொண்டு இவ்வளவு நேரம் வரையில் அவருக்கு உதவி செய்துகொண்டிருந்த ராதாவுக்குப் புதிதாய் இவ்வுலகிற்கு வந்த ஜீவனின் "குவா" சப்தத்தைக் கேட்டதும் தாளவில்லை. கொழுகொழுவென்றிருந்த அந்தக் குழந்தையை ஒரு கையில் அலட்சியமாகத் தூக்கியபடியே கிருஷ்ணன் வெளியில் சென்று, "பாட்டியம்மா! இந்தாருங்கள் உங்கள் பேரன். மாமிக்கு மயக்கம் தெளிய இன்னும் கொஞ்சம் நாழிகையாகும். அதுவரையில் இந்தப் போக்கிரிப் பயலைக் கவனித்துக்கொண்டிருங்கள்" என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டுத் திரும்பும் போது, ராதா 'தடால்' என்று விழுந்து விட்டாள். அன்று சாயங்காலமெல்லாம் ஓடி ஓடி விழுந்து தயார்செய்த அலுப்பு, பிறகு ஏற்பட்ட அபார மனக்கிலேசம், பழக்கமில்லாததும், கஷ்டமானதுமாகிய வேலையில் கணவனுக்கு உதவியாகஇருந்த தினால் ஏற்பட்ட மனத்தளர்ச்சி, இவை எல்லாவற்றுக்கும் மேலாகக் கடைசியில் ஏற்பட்ட அந்த ஆனந்தப் பூரிப்பு—இவ்வளவும் ஒன்று சேரவே, ராதாவின் தலை கிறுகிறுத்தது. மூர்ச்சித்துக் கீழே விழுந்துவிட்டாள்.

மயக்கம் நீங்கி நித்திரையில் ஆழ்ந்து கிடந்து மனைவியின் மென்மையான தோள்களைப் பிடித்து மெதுவாகக் குலுக்கினர் கிருஷ்ணன். "என்ன ராதா! மணி ஒன்பதடிக்கப் போகிறதே, நீ இங்கேயே இருந்துவிடப் போகிறாயா?" என்று கிண்டலாகக் கேட்ட கணவனது குறும்புக் கண்களைப் பார்த்த ராதாவின் மனம் துள்ளிக் குதித்தது. சென்ற இரவில் அவர் தன்னைப் பிடித்து ஆத்திரத்தோடு உலுக்கியதற்கும் இப்போது மிகுந்த ஆதுரத்தோடும் ஆர்வத்தோடும் தன்னைக் குலுக்கியதற்கும் உள்ள வித்தியாசத்தை உணர்ந்துகொண்டாள். வாரிச் சுருட்டிக்கொண்டு எழுந்திருந்தாள்.

ஒருகையில் ஆவிவரும் காப்பியையும், இன்னொரு கையில் நெய் மணம் கமழும் சூடான தோசைகளையும் ஏந்தி வரும் பாட்டியம்மாளின்மேல் ராதாவின் பார்வை விழுந்தது. "ஏனம்மா, நன்றாய்த் தூங்கினயா? மயக்கமெல்லாம் தெளிந்து போய்விட்டதா?" என்று அன்போடு விசாரித்த பாட்டியின் கேள்விக்கு டாக்டர், "என்ன பாட்டீ! தூங்கினயா என்றா கேட்கிறீர்கள் ராதாவை? இப்போதுதான் எழுந்திருக்கலாமா, வேண்டாமா?" என்று யோசித்துக்கொண்டிருக்கிறாள். அதோ அவள் தலையையும் வேஷத்தையும் பாருங்களேன், அசல் காட்டேறி மாதிரி!" என்று கேலியாகப் பதிலளித்தார்.

ராதாவின் கன்னங்கள் சிவந்தன. "அடேயப்பா, இவருக்குத்தான் எவ்வளவு பொல்லாத்தனம்! என்னைத் 'காட்டேறி' என்றெல்லாம் சொல்லுகிறாரே, மூன்றும் மனிதர் எதிரே!" என்று அவள் நினைத்துக்கொண்டாள். ஆனால் இந்தக் குறும்புப் பேச்சு அவளுக்குக் கோபமூட்டவில்லை; இன்பத்திலே அவளை ஆழ்த்தியது. "இந்த ஐந்து வருஷ மணவாழ்க்கையிலே ஒருநாள் கூட இப்படிப் பேசியதில்லையே என்று தான் அவளுக்குத் தோன்றியது.

அந்தப் பாட்டியும் தன் பொக்கை வாய்திறந்து சிரித்தாள். வெகுநாள் பழகியவள்போல் மிகுந்த சுவாதீனத்துடன், "நன்றாயிருக்கிறது டாக்டர்! எதற்காக இப்படிக் 'கோட்டா' பண்ணுகிறீர்கள், 'காட்டேறி, வீட்டேறி!' என்றெல்லாம்! மகாலக்ஷ்மி மாதிரி என்னம்மா வந்து என் வயிற்றிலே பாலை வார்த்தாள்; இந்த வீட்டு விளக்கையும் ஏற்றிவைத்தாள். நிஜமாகவே சொல்கிறேன். ராத்திரி இந்தம்மா கூடவந்ததைப் பார்த்ததும் தான் எனக்கு மனசு சமாதானமாச்சு. என்மேல் கோபித்துக் கொள்ளாதீர்கள், டாக்டர்! என்ன தான் நீங்கள் பழகியிருந்தாலும், பணமில்லாக் குறையால் தானே லேடி டாக்டரைக் கூப்பிடமுடியாமல் உங்களைக் கூப்பிடும்படியாச்சு என்று என் பெண்ணுக்கும், எனக்கும் இருக்கத்தான் இருந்தது. இதோ என்னம்மாவைப் பார்த்ததும் எங்கள் ரெண்டு பேர் மனசுக்கும் திருப்தியாகிவிட்டது. ஸாட்சாத் ராதா கிருஷ்ணனாக இரண்டு பேரும் வந்தீர்கள்! என் பெண்ணுக்கு உயிர்ப்பிச்சை கொடுத்தீர்கள். உங்கள் ஞாபகார்த்தமாக, 'பிறந்த குழந்தைக்கு 'ராதாகிருஷ்ணன்' என்று பெயர் வைக்கவேணும், அம்மா!' என்றாள் என் பெண். இதுதான் இப்போ நாங்கள் செய்யக்கூடியது" என்று மூச்சு விடாமல் பேசிய பாட்டி, தன் புடவைத் தலைப்பினால் கண்களைத் துடைத்தபடியே அப்பால் போய்விட்டாள்.

ராதாவின் உள்ளம் நீராய் உருகியது. இவர்கள் ஏழைகள். நிறைய பீஸ் தர முடியாதவர்கள், வாஸ்தவம்தான். ஆனால்,




இவர்களது அளவிட முடியாத அன்பையும்! பெருந்தன்மையையும் பணத்தை அள்ளிக்கொடுக்கும் செல்வரிடம் காண முடியுமா? ராதாவின் கண்கள் திறந்தன!

* * * * *

வேகமாகச் செல்லும் காரில், காற்றினால் அலைபடும் தலைமயிர் முன்நெற்றியிலே புரளத் தம் அருகே அமர்ந்திருக்கும் ராதாவை உற்றுநோக்கினார் கிருஷ்ணன். சர்வ சாதாரணமான அந்தக் கறுப்பு நிறப் பழம்புடவையில், என்றுமில்லாத சோபையுடன் விளங்கினாள் அவள். அவர் பார்த்த சமயம், அவளும் அவரைத் திரும்பிப் பார்த்தாள் ஒரு கணம். மறுகணம் தலைகுனிந்தபடியே, "என்னை மன்னிக்கவேணும். இத்தனை நாளுக்குப் பிறகு இன்றுதான் தாங்கள் கண்ட 'சேவையில் இன்பம்' என்பதை நானும்...தங்கள் உள்ளத்தைப்புண்படுத்த மாட்டேன். என்னை மன்னிப்பீர்களா?.... ...." என்று மெள்ளக் கூறினாள் ராதா. அவளது அழகிய முகத்தை நிமிர்த்தித் தம்பால் திருப்பிய கிருஷ்ணன், "ராதா! இது என்ன பிதற்றல்? யாரை யாரை யார் மன்னிப்பது? நேற்றிரவு நான் உன்னைப் படுத்திய பாட்டுக்கு நீயல்லவா என்னை மன்னிக்கவேண்டும்? ராதா! போனது போகட்டும். எப்பொழுது நீ சேவையில் இன்பத்தைக் கண்டாயோ, அப்போதே நீ உண்மையில் .....சரி.....டாக்டரின் மனைவி தான் என்பதை நிரூபித்துவிட்டாய்!" என்றார் அந்த வார்த்தைகள் ராதாவின் உள்ளத்திற்குப் புது விருந்தாக இருந்தன.

"போதும், நீங்கள் கார் விடுகிற லட்சணம். அது பாட்டில் கோணமாண என்று போகிறதே!" என்று நாணத்தினால் தடைப்பட்ட குரலுடன் தம்மைச் செல்வமாகக் கடிந்துகொண்ட மனைவியைப் பேரன்புடன் நோக்கினார் டாக்டர். "கரடுமுரடான பாதைகளை விட்டுவிட்டு நேரான இன்பப் பாதையில் செல்ல ஆரம்பித்துவிட்டோம்!" என்று சிரித்துக்கொண்டே கூறினார்.



# ஆசியாவும் இந்தியாவும்

## (சில குறிப்புக்கள்)

"அழகு நிறைந்தது கிழக்கு; சக்தி செறிந்தது மேற்கு" என்றார் ஓர் அறிஞர். வெள்ளைக்காரர்களில் பலரும் 'அழகு' என்ற பெருமையைக் கூடக் கிழக்கு நாடுகளுக்கு அளிக்க ஒருப்படுவதில்லை; "அழகு வாய்ந்தது கிரீஸ்; சக்தி பெருந்தியது ரோமாபுரி" என்றுதான் கூறுவதுண்டு. ஆனால் கிரீஸின் அழகுப் பெருமையும், ரோமாபுரியின் சக்திப் பெருமையும் இன்றைய பெருமைகள் அல்ல. கிழக்கு நாடுகளின் அழகோ இன்றும் உண்மைதான்; இந்த அழகின் இதயத்திலே சக்தியும் உண்டு, சாந்தியும் உண்டு.

* * *

"கீழ்நாடுகள் கீழான நாடுகளே, மேல் நாடுகள் மேலான நாடுகளே! கீழ்நாடுகளுக்கு ஏதாவது பெருமை இருந்தால் அது பண்டைப் பெருமை தான்!" என்று கருதுவோர் பலர் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் இன்றும் காணப்படுகிறார்கள். ஆனால் "கிழக்கின் பண்டைப் பெருமையினாலேயே மேற்கு உயிர் பெற்றிருக்கிறது, வாழ்வு பெற்றிருக்கிறது!" என்பதை அறிந்து, கிழக்கும் மேற்கும் ஒன்றுபடும் வண்ணம் ஒரு தங்கப் பாலம் அமைக்க விரும்பும் நல்லறிஞர்களும் உலக மெங்கும் காணப்படுகிறார்கள். இது ஒரு மங்களமான முற்குறி.

கிழக்கேயிருந்துதான் சமய ஞானம் உதயமாயிற்று. "சமையல் - ஞானமும் கிழக்கேயிருந்துதான் உதித்திருக்க வேண்டும்!" என்றுகூட ஒரு நண்பர் வேடிக்கையாகச் சொல்கிறார். அதிலும் உண்மை இருக்கக்கூடும். பச்சைமாமிசத்தைப் புசித்துக்கொண்டு வர்ணப் பூச்சும் கொச்சைப் பேச்சுமாய் 'மேற்கத்தியார்' திரிந்து கொண்டிருந்த காலத்திலேயே கிழக்கு நாகரிகமடைந்து விட்டதல்லவா? பெரிய பெரிய மதபோதகர்களில்—கன்ப்யூஷியஸ், புத்தர், மகாவீரர், ஜராதுஷ்ட்ரா, கிறிஸ்து, மகம்மது நபி முதலானவர்களில்—மேற்கே தோன்றியவர் யார்? சீனாவிலும் இந்தியாவிலும், கப்பலோட்டும் தொழில், சிற்பத் தொழில் முதலியன பண்டைக்காலத்திலேயே சிறப்புற்றிருந்தன. மேலைநாடுகள் முக்கியமான நாகரிக அம்சங்களில் கீழை நாடுகளுக்குக் கடன்பட்டவைதாம்.

ஆசியாவிலும், இந்தியாவும் சீனாவும் முக்கியமான தேசங்கள். சீனாவுக்கும் புத்த தர்மத்தை அனுப்பி வைத்த பெருமை இந்தியாவுக்குண்டு. ஆகவே இந்தியாவை 'ஆசியாவின் ஞானக் களஞ்சியம்' என்று சொல்லலாம். கிரீஸ், ரோமாபுரி, எகிப்து, பாபிலோன், அஸிரியா, பாரசீகம் ஆகிய நாடுகளில் தோன்றிய பழைய 'ராணுவ' நாகரிகங்களெல்லாம் மறைந்தும், இந்திய நாகரிகம் இன்றும் அழியாமல் வளர்ந்தோங்கும் நிலையில் இருக்கிறது. மேலைநாடுகளைப் பின்பற்றி ராணுவ பலத்தைப் பெருக்கிக்கொண்ட ஜப்பானும் பெருந்தோல்வியடைந்துவிட்டது.

* * *

"புத்தரையும் கிறிஸ்துவையும் பெற்றெடுத்த நம் புனித கண்டத்திற்கு ஒரு முக்கியமான பொறுப்பு உண்டு: மக்களின் துராசைகளால் தோன்றும் போர்க் கொடுமைகளை லட்சியம் செய்யாமல் தூய நன்னெறியைக் கடைப்பிடிப்பதே அது. பல நூற்றாண்டுகளாக நடந்துவரும் அக்கிரமங்களால் இருளடைந்து கிடக்கும் உலகத்திற்குக் காந்தியின் மூலம் புதியதோர் ஒளியை நமது கண்டம் காட்டித் தன் பொறுப்பை நிறைவேற்றியிருக்கிறது" என்றார் ஆசி

யாவின் ஆஸ்தான கவியான ரவீந்திர நாத டாகுர்.

ஆனல் காந்தியடிகளின் கொள்கையைக் கொண்டு இக்காட்டில் ஒரு புதிய சமுதாயத்தை உலகத்திற்கே ஒரு புதுமையாகத் தோற்றுவிக்கும்போதுதான் இந்தியா தன் பொறுப்பை நிறைவேற்றியதாகும். சுதந்திர இந்தியாவில் இதற்குஉரிய வசதிகள்ஏற்படவேண்டும்.

பிசாசுத் தன்மை பொருந்தியதும், உயிரை உறிஞ்சக் கூடியதுமான அஸ்திர சஸ்திரங்களிலும், அணுக்குண்டுப் போரிலும், கோய்க் கிருமி யுத்தத்திலும், ருஷ்யாவும் மற்ற ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் இன்னும் சிந்தை செலுத்திய வண்ணமாய்த் தானிருக்கின்றன. அத்தகைய பலாத்கார மார்க்கத்திற்கு விரோதமாக அகில உலக அபிப்பிராயத்தைத் திரட்டுவதற்குக் காந்தி - சிஷ்யர்கள் முயற்சி செய்ய வேண்டும். அக்நாளில் புத்தரின் அருள் சுமந்த சீடர்கள் அந்தத் தர்மத்தை இந்தியாவிலும் இலங்கையிலும் சீனவிலும் பர்மாவிலும் பரப்பியதுபோல், காந்தியடிகளின் சத்தியாக்கிரக அஹிம்ஸா தர்மத்தை நமது நாட்டிலும் ஆசியாக் கண்டமெங்கும், மேற்கு நாடுகளிலும் நன்கு பரப்ப முயலவேண்டும். அதற்காக வாவதி நமக்குத் தேசபக்தியுடன் சர்வ தேச மனப்பான்மையும் நிலைபெற வேண்டும்.

* * *

காந்தியத்தை உலகத்திற்குத் தேவையான ஒரு 'நவீன ஸோஷலிஸம்' என்று சொல்லலாம். சாதாரணமாக ஸோஷலிஸத்திலும் கம்யூனிஸத்திலும் வகுப்புத்துவேஷமும் ஹிம்ஸையுணர்வும் உண்டு; சூட்சுமமாகப் பொருளாசையும் மறைந்திருக்கிறது. காந்தியடிகளின் சமதர்மமே அகில உலக சகோதர தர்மத்திற்கு அடிகோலுவதாகும்; ஆழ்ந்தகன்ற சமய உணர்ச்சி என்ற அடிப்படை மீது ஒரு ஜீவகாருண்ய நாகரிகத்தை நிலைபெறச் செய்வதாகும்.

" இந்தியாவிலும் ஆசியாவிலும் அவதரித்த மகான்கள், காந்தியடிகள் வற்புறுத்துவது போன்ற கொள்கைகளை ஏற்கெனவே உபதேசித்துப் பார்த்தும், சமுதாயத்தை உயர்த்தும் பெரு முயற்சியில் தவறி விட்டார்களே! " என்று சிலர் வாதிக்கலாம். அந்தக் கொள்கைகளைச் சரியானபடி அனுஷ்டிக்கத் தவறியதால்தான் இந்தியாவும் ஆசியாவும் க்ஷீணகதிஅடைந்தன என்பது உண்மை. மேலும், தனி மனிதர்களை உயர்த்தப் பயன்பட்ட சத்தியத்தையும் அஹிம்ஸையையும் கொண்டு, சமுதாயத்தையே உயர்த்தவும் அரசியலைத் திருத்தவும் முதன் முதல் முயன்றவர் காந்திதான்.

* * *

பலரையும் மறந்துவிட்டுச் சிலர் கடவுளைத் தொழுது கொண்டிருந்தால் போதாது என்பதைக் கண்டு பிடித்தார் காந்தியடிகள். புத்தர், சங்கரர், இராமானுஜர், ஆழ்வார்கள், நாயன்மார்கள் ஆகிய தனிமனிதர்களை மகான்களாக்கிய உண்மை-நெறியையும் அருள்-நெறியையும் கொண்டு பாரத சமுதாயத்தையே ஒரு புதிய மகத்தான சமுதாயமாக்கி விடலாம் என்பதைக் கண்டு பிடித்த மெய்ஞ்ஞானம், தற்கால விஞ்ஞான அதிசயங்களுக்கும் மேலான அதிசயமாகும்.

இந்தியாவில் ஏகாதிபத்ய ஆட்சி போய் ஜனநாயக ஆட்சி ஏற்படுவது ஆசியாவுக்கே நல்லது. ஆசியாக் கண்டமெங்கும் அன்னிய ஆதிக்கம் ஒழிவதற்கு இது ஓர் அறிகுறி. எனினும், இந்தியாவின் ஜனநாயகம், பணநாயகமாகப் போய்விடாமலும், மேற்கு நாடுகளையோ ருஷ்யாவையோ பின்பற்றாமலும், காந்தி காட்டும் வழியில் வளர்ச்தோங்கவேண்டும். இதுதான் இந்தியாவுக்கும் நல்லது, ஆசியாவுக்கும் நல்லது, உலகத்துக்கும் நல்லது.

# அயல் உலக யாத்திரை

பெ. நா. அப்புஸ்வாமி

அறிவைக் காட்டிலும் மனம் துணிவுள்ளது; மிகவும் வேகமாய்ச் செல்வது. அறிவு தயங்கித் தயங்கி, ஒவ்வோர் அடியிலும் இது உறுதிதானா என்று சோதித்து நிச்சயப்படுத்திக்கொண்டு, அதன்பின்பே மற்றோர் அடி எடுத்து வைக்கும் இயல்புள்ளது. மனமோ கூசாமல் முன்செல்லும் சுபாவமுள்ளது. மனத்தால் மனிதன் கணப்பொழுதில் உலக சஞ்சாரம் செய்துவிடுகிறான்; பிற உலகங்களுக்கும் சென்று மீள்கிறான்.

கவிமனம் படைத்த ஆசிரியர்கள் இவ்வகையான யாத்திரைகளை, உண்மையில் நிகழ்ந்தவைபோல் தோற்றும்படியாக, விவரமாய் வர்ணித்துக் கூறியிருக்கிறார்கள். ஒவ்வொரு நாட்டுப் புராணக் கதைகளிலும் பலர் சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் போய் மீண்ட வரலாறுகளைக் காணலாம். அனுமன் சூரிய மண்டலத்தைப் பிடிக்கச்சென்று மீண்ட கதையை நீங்கள் கேட்டிருக்கலாம்.

பிற்கால ஆசிரியர்களும் இவ்வகையான கற்பனைக் கதைகளைச் சிருஷ்டித்திருக்கிறார்கள். மஞ்சாஸன் பிரபு தன் கையிலிருந்து நழுவிய வெள்ளிக்கோடரியைத் தேடிச் சந்திர மண்டலத்துக்குப் போய்வந்த வரலாற்றைப் படித்திருப்பீர்கள். ஜூல்ஸ் வெர்ன் என்னும் ஆசிரியர் கூறும் கட்டுக்கதையையும் நீங்கள் கேட்டிருக்கலாம். அதில் கூறிய வரலாற்றின்படி சிலர் மிகப் பெரிய பீரங்கிக் குண்டையும் அதைச் சுடுவதற்கேற்ற மிகப் பெரிய பீரங்கியையும் செய்தார்கள். அந்தப் பீரங்கிக்குண்டுக்குள் தாம் உட்கார்ந்து கொண்டார்கள். அந்தக் குண்டைச் சந்திரமண்டலத்தை நோக்கி எய்யச்செய்தார்கள். இவ்வாறு இடைவெளியைக் கடந்து சென்று, சந்திர மண்டலத்தை அடைந்தார்கள். அதைப் போலவே பாரதி எழுதிய 'ஞானரதம்' என்னும் கட்டுரையையும் படித்திருப்பீர்கள். இவையாவும் முழுக் கற்பனைகள்.

நவீன விஞ்ஞானிகள் தங்களுடைய சோதனைக் கருவிகளால் அறியப்பட்ட விஷயங்களை ஆதாரமாக வைத்துக்கொண்டு, பூமியில் வாழும் மனிதன் ஒருவன் பிற உலகங்களுக்குச் சென்றால், அங்கே உள்ள நிலைமைகளாலும் பொருள்களாலும் அவன் எவ்வாறு பாதிக்கப்படுவான் என்று அறிவொளி வீசும் தங்கள் மனக்கண்ணால் கண்டு, வர்ணித்துக் கூறியிருக்கிறார்கள்.

ஸர் ஜேம்ஸ் ஜீன்ஸ் என்னும் மிகச் சிறந்த விஞ்ஞானி இவ்வாறு சில அயல் உலக யாத்திரைகளைக் 'கண்டு' வர்ணித்திருக்கிறார்.

நமது பூமிக்கு மிகவும் அருகிலுள்ளது சந்திரன். அதைப்போலவே சூரியனுக்கு மிகவும் அருகிலுள்ளது புதன் என்னும் கிரகம். பூமியில் வாழும் மனிதன் அங்கே சென்றால் எம்மாதிரியான உணர்ச்சிகளைப் பெறுவான்? அந்தக் கிரகம் சூரியனுக்கு மிகவும் அருகிலுள்ளதாதலால், அங்குள்ள சூடு மிகவும் அதிகமாயிருக்கும். அதை மனிதரால் தாங்க முடியாது. மடமட என்று எரியும் அடுப்பின்மேல் வைத்துக் காய்ந்த இருப்புச் சட்டியிலே போடப்பட்ட கத்தரிக்காய் வதங்கி வெடித்து, கருகிப்போகும் அல்லவா? அம்மாதிரியே மனிதனும், புத மண்டலத்திலே, பொசுங்கிக் கருகித் துடித்து மாள்வான். புதமண்டலத்தில் காணும் மற்றொரு நிலையாலும் மனிதன் அங்கு உயிர்தரித்து வாழமுடியாது. அங்கே வாயுமண்டலம் என்பதே கிடையாது. ஆகையால், வாயுவைச் சுவாசித்து உயிர்வாழும் மனிதன் அங்கே மூச்சுத் திணறி இறந்துபோவான். ஆதலால் புதமண்டலத்துக்கு எவனாவது யாத்

திரை செய்தால், அவன் உயிரோடு மீள மாட்டான் என்பது உறுதி.

சூரியனுக்கு அடுத்தாற்போலுள்ளது சுக்கிரன். இது கிட்டத்தட்டப் பூமியின் அளவே உள்ளது. இதைச்சுற்றி மேகங்கள் எப்போதும் செறிந்திருக்கின்றன. ஆதலால், இங்கே நீர் இருக்கக்கூடும். இது சூரியனுக்கு அருகில் உள்ளதால் இங்கே வெப்பமதிகம். ஆதலால் இங்குள்ள நீரின் வெப்பமும் மிகவும் அதிகமாயிருக்கும். சுக்கிர மண்டலத்துக்குச் செல்லும் மனிதர்கள் இட்டலிப்பானையில் வேகும் இட்டலியைப்போல் வெந்து போவார்கள்.

சுக்கிரமண்டலத்துக்கு அடுத்தபடியாகச் சூரியனுக்கு அருகிலுள்ளது செவ்வாய் என்னும் கிரகம். பூமியிலிருந்து பார்ப்போருக்கு இது சற்றே செந்நிறமாகத் தோன்றும். வெகுகாலமாக, வானசாஸ்திரிகள் தூரதிருஷ்டிக் கண்ணாடிகளின் மூலமாகவும், பிற கருவிகளின் மூலமாகவும் இதை ஆராய்ந்து வந்திருக்கிறார்கள். 'பூமியில் போல இதிலும் பிராணவாயு இருக்கிறது. பனித்துருவங்களும் தென்படுகின்றன. அத் துருவங்களிலிருந்து நேரே கோடிட்ட மாதிரியாகச் சில வாய்க்கால்கள் வெட்டப்பட்டுள்ளன. மனிதரைப் போன்ற அறிவுள்ள ஒருவகை மக்கள், சிறந்த கருவிகளைக் கொண்டு தங்கள் முயற்சியால், வெட்டியவையே இக்கால்வாய்கள். பனிமூடிய துருவத்திலே உள்ள நீரை, இக்கால்வாய்களின் வழியாக, நீரற்ற பாலைப் பகுதிகளுக்குக் கொண்டுவந்து பாய்ச்சி, அப்பகுதிகளைச் செழிப்பாக்க முயலும் முயற்சியே இவற்றுக்குக் காரணம்' என்று சில விஞ்ஞானிகள் கூறினார்கள். வேறு சிலர் இதை ஒப்புக்கொள்ளவில்லை. 'அரைகுறை வெளிச்சத்தில் வேலைசெய்து வரும் விஞ்ஞானிகள் காற்றில் மிதக்கும் தூசியையோ, தூரதிருஷ்டிக் கண்ணாடியிலுள்ள வடுவையோ கண்டு, வாய்க்கால்கள் என்று தவறாக நினைக்கிறார்கள்' என்று அவர்கள் மறுத்துக் கூறினார்கள். மற்றும் சிலர், 'இக்கோடுகள் செவ்வாயின் பிம்பத்தில் இல்லை. இவர்கள் கண்களுக்குள்தான் இருக்கின்றன' என்று புரளி செய்தார்கள்.

நேரில் பார்த்து இதன் உண்மையைத் தெரிந்துகொள்ளலாமே என்று ஒருவன் செவ்வாய்க்குப் போவானானால், அங்கே என்ன நடக்கும்? சாகாமல் உயிர் தாங்கப் போதிய பிராணவாயு அங்கே இருக்கும். அதனால் அவன் உடனே இறந்துபோக மாட்டான். பூமியைக் காட்டிலும் சூரியனிடமிருந்து அதிக தூரத்தில் செவ்வாய் இருப்பதால், அங்கு குளிர் அதிகமாயிருக்கும். ஆனால், அவ்வளவு அதிகமான குளிர் பூமியிலும் சில இடங்களில் இருக்கக் காணலாம். பூமியில் அப்படிப்பட்ட குளிர்மிகுந்த இடங்களிலும் மக்கள் வாழ்வதால், செவ்வாயிலும் அக்குளிரைத் தாங்கிக்கொண்டு மனிதர் வாழ முடியும்.

ஆனால், சில விஞ்ஞானிகளை நம்பி, நாம் வேறு சிலவற்றை அங்கே எதிர்பார்த்தோம். அங்கே வந்தவர்களை எதிர்கொண்டு, முகமலர்ச்சியோடு வரவேற்று உபசரிக்கவோ, அல்லது புதிதாய் யாரோ வந்துவிட்டார்களே என்று கோபங்கொண்டு, உத்தரவில்லாமல் தங்கள் உலகத்தில் புகுந்தவர்களைத் தாக்கிக் கொல்லவோ ஒருவகை ஆட்களும் அவ்வுலகத்தில் இருக்கமாட்டார்கள். 'நாம் கட்டிய மனக் கோட்டையெல்லாம் தகர்ந்துபோய்விட்டதே' என்று அங்கு சென்ற மனிதர்கள் வருந்த வேண்டியிருக்கும்.

சூரியனைச் சுற்றியுள்ள கிரகங்கள் எல்லாவற்றிலும் பெரிதானது வியாழன். 'இது இவ்வளவு பெரிதாயிருக்கிறதே. ஜனநெருக்கம் மிகுதியாகி, வருந்தும் பூமியைவிட்டு வியாழ மண்டலத்துக்குச் சென்று, அங்கே சௌகரியமாக வாழலாமே' என்று சிலர் எண்ணலாம். அப்படி ஒருவன் அங்கே சென்றால், அவன் படும் பாட்டைச் சொல்லிமுடியாது. வியாழனிலும் ஒரு வாயுமண்டலம் இருக்கிறது. ஆனால், அந்த வாயுமண்டலத்தில் நாம் சுவாசித்துவரும் பிராண வாயு கிடையாது. அதில் பெரும்பான்மை

யர்க் உள்ளவை இரண்டு வாயுக்கள். 'கார்பன்டைஆக்ஸைட்' எனப்படும் கரிய மிலவாயு ஒன்று. இது பிராணிகளின் உயிரைக் தாங்குவதற்குப் பதிலாக, அதை அவிக்கும் இயல்புடையது. இக் காற்றைச் சுவாசிக்கும் மனிதன் மூச்சுத் திணறி இறந்து போவது திண்ணம். வியாழனின் வாயுமண்டலத்திலுள்ள மற்றொருவாயு 'அம்மோனியா' என்பது. இது முகத்தில் வீசியமாத்திரத்திலேயே கண்ணிலிருந்து தாரைதாரையாக நீர் ஒழுகும்; மூக்குக் குறுகுறு என்னும்; ஓயாமல் தும்மல் வந்து கொண்டேயிருக்கும்—அதாவது, உயிர் நீடித்திருக்கும் வரை.

ஏதாவது உபாயத்தால் இந்த வியாழ மண்டலத்திலே சிறிதுநேரம் உயிர்வாழ முடிந்தால், அப்பொழுது அங்கே சாதாரணமாக நடப்பதும், துள்ளுவதும் மிகவும் கஷ்டமான செயல்கள் என்பது தெரியவரும். பூமியில் ஆறடி தாண்டிக் குதிக்கும் ஒருவன் அங்கே இரண்டடி உயரத்துக்குமேல் தாண்டிக் குதிக்க முடியாது. அங்குள்ள வாயுமண்டல அழுத்தம் அவ்வளவு அதிகமாயிருக்கும். தண்ணீர்த் தொட்டியில் உட்கார்ந்து கொண்டு, இந்த அழுத்தத்தினால் உண்டாகும்சிரமத்தை நீக்கிவிடலாமே என்று நினைக்கக்கூடும். இது நல்லஉபாயம்தான். ஆனால், இதில் இரண்டே இரண்டு கஷ்டங்கள்தான் இருக்கின்றன. முதலாவது, அங்குள்ள குளிர் மிக மிக அதிகம். தண்ணீரைப் பனியாக உறையச்செய்யும் குளிருக்கும் 240 டிகிரி குறைவானது. இரண்டாவது, அங்கே தண்ணீரே கிடையாது.

இவ்வாறு புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன் என்னும் நாலு கிரகங்களுக்கு யாத்திரை செய்தால் என்ன நிகழும் என்று அறிஞர்கள் கூறும் உண்மைச் செய்திகள் கவிகள் கூறும் கற்பனைக் கதைகளை விட விந்தையாயிருக்கின்றன அல்லவா?


நான்கோ பிரிண்ட் இங்கி

இந்தியா, சென்னை, பீஹார், மைசூர், திருவாங்கூர் சர்க்கார்களாலும், சென்னையிலும், வெளியூர்களிலும் உள்ள பிரிண்டர்களாலும் மிகவும் உபயோகிக்கப்படுகிறது.

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும்:

S. நாராயணன் & கம்பெனி

1, கிண்டி ரோடு, அடையாறு, சென்னை.


ஓ! டீ இல்லாவிட்டால்...
இனி பெரிய விருந்துகளை அளிப்பது சாத்தியமில்லை. ஆகார வகைகள் கிடைப்பது துர்லபம். தடைகளும் அநேகம் இருக்கின்றன. ஆனால் நல்ல தேநீர் விருந்தளிப்பதில் ஒருவித நிபந்தனையும் கிடையாது. விருந்தளிப்பவர்கள் தங்கள் சிநேகிதர்களுக்கு நல்ல டீ அளித்து களிப்படையக்கூடும். நல்ல டீ சரீரத்துக்கு ஓய்வைக் கொடுத்து மனதிற்கு விசிராந்தியை அளிக்கிறது. அது நல்ல சிநேகிதர்களை உண்டாக்கி பேச்சில் ஒரு சுவாரச்யத்தையும் கொடுத்து பழய ஞாபகங்களையும் உண்டுபண்ணுகிறது. பெயர் பெற்ற ஹாஸ்ய எழுத்தாளரான சிட்னிச்மித் "உலகம் டீ இல்லாமல் என்ன செய்யும்? டீ ஏற்படுவதற்கு முன் நான் பிறக்கவில்லையே என்ற சந்தோஷம் எனக்கு" என்று சொன்னதில் ஆச்சர்யம் ஒன்றுமில்லை.
நல்ல டீ தயாரிக்கும் முறை
1 டீயை கெட்டிலில் சேர்க்காதே. டீபாட் உபயோகி.
2. டீபாட் ஈரமில்லாமலும் வெதவெதப்புடனும் இருந்தால் தான் உலர்ந்த டீ தழையைப்போட்டு கொதி ஜலம் விட்டதும் அது ஜோராய் ஊறி நல்ல மணத்தைத் தரும்.
3. ஒவ்வொரு கப் டீக்கும் ஒரு டீ ஸ்பூன் தழை போட்டு அதிகப்படியாக டீ பாட்டிற்கு ஒரு ஸ்பூனும் போடவும்.
4. புதிதாக கொதிக்க வைத்த தண்ணீரையே உபயோகிக்கவும். ஒரு பொழுதும் முன்னாடியே கொதிக்கவைத்த ஜலத்தையோ கொதிக்காத ஜலத்தையோ அல்லது ரொம்ப கொதிக்க வைத்த ஜலத்தையோ உபயோகிக்காதே. ஜலம் குமிழியைப் போல் கிளம்பும்பொழுது தான் அது கொதிப்பதற்கு அடையாளம்.
5. ஐந்து நிமிஷத்திற்கு குறையாமல் ஊற வேண்டும்.
6. டீ பாட்டில் இருக்கும் பொழுதே சர்க்கரையும், பாலும் சேர்க்காதே. கப்புகளில் கஷாயத்தை ஊற்றிவிட்டே அவைகளை சேர்க்கவும்.
டீ
எந்நேரமும் டீ நேரம் தான்
இந்தியன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டால் வெளியிடப்பட்டது

# சு(த)ந்தர முதலியார்

அ. இ.

'அவசரமாய்ப் புறப்பட வேணும். பத்து நிமிஷம் தான் உனக்கு அவகாசம் கொடுப்பேன்' என்றார் ராவ்பகதூர் சுந்தர முதலியார், களைத்த, களையற்ற, பார்வையுடன்—ஜீப்பில் இருந்தபடியே. 'சுந்தரமா! இவ்வளவு சீக்கிரம் வந்துவிட்டானா? என்ன தொந்தரவு! சுதந்தரத் திருநாளில் சென்னைமாநகரெங்கும் சுற்றித் திரிந்து விழாக் கொண்டாடாமல் ஊரை விட்டு எங்கெங்கேயோ போகவேணுமாம்' என்று தனக்குள் தானே சொல்லிக்கொண்டு, வெளிப்படையாக, 'அப்படியெல்லாம் அவசரப்படுத்தினால் முடியாது; துரையவாள் தனியாகப் போகவேண்டியது தான்! இந்தப் புஸ்தகங்களையும் பத்திரிகைகளையும் ஒழுங்குபடுத்தி வைத்துவிட்டு, ராட்டையும் ஒதுக்கமாய்வைத்துவிட்டு, சட்டை போட்டுக்கொண்டு நான் தயாராவதற்கு அரைமணி நேரமாவது செல்லும்' என்று பதில் சொன்னார் கன்னியப்பன். முதலியார் சிரித்துக்கொண்டே ஜீப்பிலிருந்து இறங்கிக் கன்னியப்பனின் அறைக்குள் நுழைந்து சாய்வு - நாற்காலியில் ஜம் மென்று சாய்ந்துகொண்டார்.

காங்கிரஸ் அடைந்திருக்கும் சுதந்தரத்தைப் பரிகசித்து மள மள வென்று பேசிக்கொண்டிருந்தார் சுந்தரம். "நீங்களெல்லாம் கிளர்ச்சி செய்து சிறைபுகுந்து தவம் கிடந்து அமிர்த கலசம் கொண்டு வந்து விட்டீர்களே, அது அமிர்தம் தானா? எல்லாருக்கும் தானா? அதோ, அந்தக் கும்பலைத் தாண்டி ஜீப்பை ஓட்டிவருவதற்குள் பிராண சங்கடமாய்ப் போய்விட்டது! ஒழுங்கு, சட்டம், பெரியவன் என்ற மதிப்பெல்லாம் போய் விட்டது. 'கும்பலில் கோவிந்தா!' போடும் ஒற்றுமையாவது உங்களுக்கு உண்டா? பாக்கிஸ்தான், இந்துஸ்தான், திராவிடஸ்தான்—என்றெல்லாம் முரண்பட்ட கூச்சல்கள். என்றுமே ஒற்றுமை கிடையாதப்பா நமது நாட்டிலே. இந்தியாவின் ஒருமை, ஒற்றுமை எல்லாம் பிரிட்டிஷ் சிருஷ்டி தான்! எந்தக்காலத்திலேயோ—பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே—ஏற்பட்டிருந்த ஆரிய திராவிடச் சண்டை கூடப் புத்துயிர் பெற்று விட்டது! காங்கிரஸ் கிளர்ச்சியிலிருந்து கிளைத்த ஒரு புதுமைக் கிளர்ச்சிதானே இதுவும்?' என்றெல்லாம் ராவ்பகதூர் தம் கண்டன புராணத்தில் ஓர் அத்தியாயம் படனம் செய்துவிட்டுக் களைத்துப் போய்த் தம் தங்க மூக்குக்கண்ணாடியைக் கழற்றி வைத்துவிட்டு, நீண்ட சுருட்டைப் பற்ற வைத்தார்.

கன்னியப்பன் பதில் சொல்லாமலே அந்தப் பேச்சை வழக்கம் போல் அனுபவித்த வண்ணம் தம் வேலைகளை ஆற அமர முடித்துக்கொண்டு, 'நான் தயார்; இனி உனக்கு ஐந்து நிமிஷம் தான் அவகாசம் கொடுப்பேன்!' என்று சொல்லிவிட்டு மடமட வென்று ஜீப்பில் போய் உட்கார்ந்து கொண்டான்.

இந்த இரண்டு நண்பர்களும் இத்தகைய அபிப்பிராய பேதங்களுக்கு இடையே நண்பர்களாயிருப்பதுதான் ஆச்சரியம். ராவ்பகதூர் முதலியார் தேசப்பிரசித்தி பெற்றவர்; தேசபக்தி தான் கிடையாது—வியாபாரி; மேல்நாட்டு விஸ்கி முதலான மது வகைகளை விற்பனை செய்து ஏராளமாகப் பொருள் தேடிக் குவித்தவர். மது விக்கிரயம் தான், தாம் மதுபானம் செய்வதேயில்லை. கன்னியப்பன் முதலானவர்கள் 'மறியல்' செய்த காலங்களில் தாம் நஷ்டமடைந்த போதிலும், நட்பைக் கைவிடாமல் இருந்தார், பள்ளிக்கூடத் தோழமையானதால். காங்கிரஸ் மந்திரி சபையை ஏற்றுக்

கொண்டு சுதந்தரப் பேச்சு வலுத்ததும், ராவ்பகதூர் கன்னியப்பனைச் சந்திப்பதும், தேசபக்திக்கு விரோதமாய்ப் பேசி அவன் வாயைத் தூண்டுவதும் அடிக்கடி நிகழ்ந்தன.

'பெட்ரோல் ஏராளமாய் மிஞ்சி யிருக்கிறது. எப்போதும் நகர வாழ்க்கையிலேயே ஆழ்ந்து கிடக்கும் நாம் சுதந்திர தினத்திலாவது விடுதலை பெற்று ஜீப்பில் பறந்து கொண்டிருப்போம்; நகரத்தை விட்டு எங்கேயாவது ஓடிப்போய் வருவோம்' என்று, முந்திய சந்திப்பில் ராவ் பகதூர்சொல்லி யிருந்தார். கன்னியப்பன் முதலில் அதற்கு இணங்கவில்லை. எனினும் 'கொடிவணக்கம் செலுத்தவும், குதூகலமாய் விழாக் கொண்டாடவும் தான் எத்தனையோ நண்பர்கள் இருக்கிறார்களே; இந்த விதேசி நண்பனின் விநோத ஆலோசனைப்படி எக்கேயாவது போய்ப் பார்த்தால் தான் என்ன ?' என்று எண்ணி, மீண்டும் ராவ் பகதூர் வற்புறுத்தியதும் 'சரி' சொல்லி விட்டார்.

ஜீப்பை 'டிரைவர்' வேகமாய் ஓட்டிக் கொண்டு போனான். 'நீ முன்பு தான் வௌவாலைப்போல் மிருகக் கட்சியிலும் சேராமல், பறவைக் கட்சிலும் சேராமல் இருந்தாய்; இப்போது பகலைக் கண்டு அஞ்சும் வௌவால் போல் அஞ்சுகிறாயே! எல்லாம் சுயநலம் தான், வியாபாரம் போய்விடும் என்று தானே பயம்?' என்று பரிகசித்தார் கன்னியப்பன் தமது நண்பரை. அதற்கு விடையாக ராவ்பகதூர், 'என்ன சுதந்திரம் அப்பா! கொண்டுவந்து விட்டீர்கள், சுதந்திரப் பிரியர்கள்!—ஏழைகள் எத்தனையோ கவலைகளை மறப்பதற்காகக் குடிக்கும் சுதந்திரத்தைக்கூடப் பறித்து விடப் பார்க்கிறீர்களே! இப்படி அரசாங்கத்தின் வருமான வழிகளையெல்லாம் அடைத்துவிட்டு, எப்படித் தான் புதிய இந்தியாவை, புதிய தமிழகத்தை, நிர்மாணம் செய்யப்போகிறீர்களோ? கடவுளுக்குத்தான் வெளிச்சம்! சரி, கோவில் பணத்தையும் தாறுமாறுய் வாரி இறைத்து இந்த 'நாஸ்திகப்' படிப்பை வளர்க்கப் பார்க்கிறீர்கள்!' என்று மறுபடியும் ஒரு பிரசங்கம் செய்ய ஆரம்பித்து விட்டார்.

ராவ்பகதூர் பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்திற்கு ஒரு துணை விளங்கியது போல் ஸனாதன தர்மத்திற்கும் துணை விளங்குகிறவர். தமது மதுக்கடைகளின் வருமானத்தில் ஒரு பகுதியைக் கொண்டு சிவாலய புனருத்தாரணம் செய்து சிவ புண்ணியமும் கட்டிக் கொண்டவர். திடீரென்று மீண்டும் அவர் பிரசங்கிக்கத் தொடங்கியதும், கன்னியப்பன் அந்தப் பேச்சை மாற்ற விரும்பி, 'நாம் இப்போது எங்கே போகிறோம்?' என்று கேட்டார்.

'காஞ்சிபுரம் போகிறோம். காமாட்சி தரிசனத்திற்குத் தான். நீயும் ஏதோ "சுதந்திர தேவி" என்று சொல்லுகிறாயே; காமாட்சி தேவியைச் சுதந்திர தேவியாகத் தரிசித்தால் போகிறது!'

'எனக்கு ஒன்றும் ஆட்சேப மில்லை. காமாட்சி கோவிலிலும் ஹரிஜனப் பிரவேசம் ஆகிவிட்டதால், தேவிக்கும் சுதந்திரம் கிடைத்து விட்டது; உள்ளபடியே மூடக் கட்டுகளிலிருந்து விடுதலை பெற்றுச் சுதந்திர தேவியாகிவிட்டாள்!'

'என்ன தூஷணை! அப்படியும் சொல்லுகிறாரா உங்கள் காந்தி?'

'நானுகத்தான் சொன்னேன். ஹரிஜனங்களுக்கு ஆலயப் பிரவேசம் ஏற்படாதவரையில், எந்த ஆலயத்திலும் எல்லாருக்கும் சமநோக்குடன் அருள் புரியும் தெய்வம் இருக்க முடியாது என்பது எப்போதுமே காந்தியடிகளின் கொள்கைதான். ஹரிஜன ஆலயப் பிரவேசம் ஏற்படுவதற்கு முன், விக்கிரக ஆராதனையில் நம்பிக்கை யுள்ளவராக இருந்தும் காந்தியடிகள், தாமும் ஆலயப் பிரவேசம் செய்வதில்லை யென்று விரதம் பூண்டிருந்தார். மதுரை மீனாட்சியம்மன் கோவிலுக்கு மட்டும் போயிருந்தார், தம் தமிழ் நாட்டு யாத்திரையில். தெரியுமோ, இல்லையோ? காமாட்சியம்மனுக்கு முன் மீனாட்சியம்மனுக்குத்தான் கருணை பிறந்து விட்டது ஏழைகள் மீது! முன்னமே ஆலயப் பிரவேசம்........

என்ன ? இருட்டில் வழிதெரியாமல் இப்படி ஓட்டிக்கொண்டு...அடடா, தொலைந்தோம் !'

'ஐயோ! காமாட்சி ! தேவதூஷணைக்குத் தண்டனையா ?'

மரத்தில் மோதிக்கொண்டது ஜீப். இருவரும் வெளியே வீசி எறியப்பட்டார்கள். ஸ்மரணையேஇல்லாமல்சிறிதுநேரம் கிடந்தார்கள். டிரைவர் விபத்து ஏற்படுவதற்கு முன்பே லாகவமாய்க் குதித்துச் சொற்பக் காயங்களோடு தப்பிப் பிழைத்து, இவர்களைத் தேடி வந்தான்.

முதன் முதல் கன்னியப்பன் மூர்ச்சை தெளிந்து எழுந்தார். எழுந்ததும் தனக்கு யாதொரு காயமும் இல்லையென்று தெரிந்து, ராவ்பகதூர் சுந்தரத்தைத் தேடிப்பார்த்தார். டிரைவரை ராவ்பகதூர் கோபித்துக் கொண்டிருந்தார். அவருக்கும் காயம் படவில்லையென்று தெரிந்து கொண்டார் கன்னியப்பன். அங்கேயிருந்து காஞ்சிபுரத்திற்குச் சுமார் எட்டு அல்லது ஒன்பது மைல் தூரம் தான் இருக்குமென்று டிரைவர் சொன்னதும், ராவ்பகதூர் டிரைவரை நோக்கி, 'அப்படியானல் நீ காரைப் பார்த்துக்கொண்டிரு. காமாட்சி தான் நம்மைக் காப்பாற்றினள், உன்னைச் சொற்பக் காயத்துடன் எச்சரித்திருக்கிறாள். நாங்கள் இருவரும் நடந்தே கோவிலுக்குப் போய்வருகிறோம்' என்றார்.

கன்னியப்பனும் சுந்தரமும் தங்கள் கையிலுள்ள டார்ச்சு லைட்டுகளின் உதவி கொண்டு அந்த இருளில் நடந்து போனர்கள், காஞ்சிபுரத்தை நோக்கி. இரண்டு மூன்று மைல் நடந்ததும், சுந்தரத்தின் வாதக்கால் கொஞ்சம் தொந்தரவு கொடுக்க ஆரம்பித்தது.

'திரும்பிப்போய் விடலாமா ? ஏன் இப்படிப் பைத்தியக்காரத் தனமாய்ப் புறப்பட்டோம் ?'

'மடியிலே கனமிருந்தால் வழியிலே பயமிருக்கும் என்பார்கள். சுந்தரம்! உனக்கு மடிக்கனம் மட்டும் இல்லை, வயிற்றுக்கனமும் இருக்கிறது ! உள்ளத்திலோ உண்மையான பக்தியுமில்லை ! அதனால்தான் தைரியமில்லை.'

'பரிகாசத்திற்கு இதுவா சமயம் ? என்னல் நடக்கமுடியவில்லை. கன்னியப்பா ! மெள்ள மெள்ளப் போனாலும் என்ன ஆபத்து ஏற்படுமோ ? காமாட்சியை நினைத்துக் கொண்டு திரும்பி டிரைவர் இருக்கும் இடத்திற்கே போய் விடலாம்.'

'திரும்பிப்போவது தான் ஆபத்து ! காமாட்சியை நினைத்துக் கொண்டு முன்னேறுவதுதான் நலம். ஏன் அப்படி ? சுந்தரம் ! நீ பயப்படா விட்டால் சொல்லுகிறேன். இந்த இடத்திற்கு முன்பு ஒரு தடவை பகலில் வந்திருக்கிறேன். நாம் தாண்டிவந்த இடமெல்லாம் பாம்புக்காடு ! 'பேய்க்காடு' என்றும் மூடநம்பிக்கை யுள்ளவர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். 1942 - ஆகஸ்டு கலவரத்தில் போலீஸ் அட்டூழியங்களுக்காகச் சென்னை விட்டு இந்தப் பக்கமெல்லாம் அலைந்து திரிந்தேன் தலைமறைவாக. இப்போது ஞாபகத்திற்கு வருகிறது.'

'பேய்க்காடா ? ஐயையோ ! அப்படியானல் நேரே காஞ்சிக்கே போய்விடுவோம், காமாட்சியைத் தியானித்துக் கொண்டு.'

இருவரும் அடிமேல் அடியெடுத்து வைத்துப் போய்க் கொண்டிருந்தார்கள். ராவ்பதூர், 'காமாட்சி துணை' என்று ஜபம் செய்த வண்ணமாய்க் கன்னியப்பனைப் பின்பற்றி நடந்தார். அடிக்கடி பின்னே பார்த்துக் கொள்வார். யாரோ கள்ளன் தொடர்ந்து வருவதுபோல் ஒரு சமயம் பிரமித்து நோக்குவார் ; ஒரு சமயம் பேயோ, பிசாசோ தொடர்ந்து வருவது போன்ற பிரமையால், 'காமாட்சி, காமாட்சி' என்று கத்திக் கொண்டே பின் நோக்குவார். இந்த நெருக்கடியைக் கண்ட கன்னியப்பன் பரிகசிப்பதை விட்டு, ராவ்பகதூரைக் கையைப் பிடித்துக்கொண்டு, 'பயப்பட வேண்டாம் ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்று நமது பாட்டிமாரும் சொல்

வதுண்டல்லவா ?' என்று உத்ஸாகப் படுத்தினர்.

ராவ்பகதூர் கைப்பிடியை விட்டுச் சிறிது முன்னே போனர். பானைக் கணக்காகப் பணத்தை வாரிக்கொண்ட ராவ்பகதூரின் வயிறும் பானைபோல் பருத்திருந்ததால் பூமியைப் பார்த்து நடக்கமுடியவில்லை. கன்னியப்பன் டார்ச்சு லைட்டை வீசிக்கொண்டு சிறிது பின்னே வந்தார்.

'ஐயோ செத்தேன் !' என்று ராவ்பகதூர் கூச்சலிட்டதைக் கேட்டு, விரைந்து வந்து அவரை விழுந்துவிடாமல் தாங்கிக்கொண்டார். 'ஒன்றும் இல்லை, அந்த வேரில் கால்பட்டு விழத் தெரிந்தேன் !' என்றார் பயந்து கொண்டே. டார்ச்சுலைட் நன்றாக அதன் மீது விழுந்தது. வேரல்ல, மனிதன் தான் ! என்ன கோரம் ! ராவ்பகதூரின் கால் இடறியது அந்தக் குடியன் மீதுதான். அவ்வளவு கள் வெறியா ? இருவர் டார்ச்சு லைட்டிலும் அந்த ஆசாமியின் முழுச் சொரூபமும் தெரிந்துவிட்டது. அடடா, சீசாவைப் பிடித்த அந்தப் பிடி விடவே இல்லை—செத்த போர்வீரன் தன் உடைந்த வாளின் பிடியை விடாதது போலே! இறந்து போன இந்திரஜித்தனது கை, பிளந்து போன தன் வில்லின் பிடியில் விடாப் பிடியாகப் பிடித்திருந்தது போலே!

ராவ்பகதூர் நடுங்கிப்போனர், அந்த மது வீரனின் தியாகத்தை அப்படிப் பார்த்ததும்! முதலில் 'குடிவெறியாக இருக்கும்' என்றே எண்ணினர். 'வெறியில்லை, சாவுதான் !' என்று தெரிந்ததும், திக்பிரமை பிடித்தவர் போல் ஆனர். ஒரு பர்லாங் தூரத்தில் சிறு வெளிச்சம் தெரிந்தது. இருவரும் அந்த இடத்தை நோக்கிப் போனர்கள்.

ஒரு குடிசை. அங்கே ஒரு ஸ்திரீ இவர்களைக் கண்டதும், 'இந்த இருட்டில், இந்தக் காட்டுவழியாக ஏன் வந்தீர்கள் ? இப்படித் தனியாக வரலாமா ? குடிகாரர் தொந்தரவு உண்டே !' என்று கேட்டாள். ராவ்பகதூருக்குத் தாகம் நாக்கை வறட்டியது. அவள் அன்புடன் சீவிக்கொடுத்த இளநீரை அமுதமாகப் பானம் செய்துவிட்டு, 'ஏனம்மா ! இப்படி இந்த நேரத்தில் விளக்கு ஏற்றி வைத்துக்கொண்டு காத்திருக்கிருய் ? புருஷன் இன்னும் தன் வேலையை முடித்துக்கொண்டு திரும்பி வரவில்லையா ?' என்று மெள்ளக் கேட்டார்.

அந்த அம்மாளுக்கு அழுகை வந்துவிட்டது. 'நீங்க பெரிய மனுசா ! உங்க காதிலே ஏழை துன்பத்தை ஏன் போட்டுப் புண்ணாக்கணும் ?' என்று விம்மிக்கொண்டே சொன்னள். கன்னியப்பன், எலும்பும் தோலுமாய் உறங்கிக் கொண்டிருந்த அரைடஜன் குழந்தைகளையும், மற்ற வறுமைச் சின்னங்களையும் ராவ்பகதூருக்குக் காட்டினர்.

அவள் புலம்பிக் கொண்டே சொன்ன கதையிலிருந்து, புருஷன் பெருங்குடியனென்றும், சில இரவுகளில் வீட்டுக்குத் திரும்புவதே யில்லை யென்றும், விதை நெல்லையும் விற்றுக் குடித்துவிட்டானென்றும் தெரியவந்தது.

கன்னியப்பன் ராவ்பகதூர் காதில், 'சரி சரி, அந்த ஆசாமிதான் போயிருக்கிறது ! இனி அவன், வீட்டுக்குத் திரும்பப் போவதே இல்லை!' என்று கண்ணீர் துளிக்கச் சொன்னன். ராவ்பகதூர் 'ஐயையோ, என்று அலறிவிட்டார். அந்த ஸ்திரீயோ ஒன்றும் புரியாமல் மிரள மிரள விழித்தாள்........

கன்னியப்பனும் ராவ்பகதூரும் மறுபடியும் பிரேதம் கிடந்த இடத்திற்குப் போய் வெகு சிரமத்துடன் அதைத் தூக்கிக்கொண்டு குடிசைக்கு வந்தபிறகுதான், அந்த ஸ்திரீக்கு விஷயம் ஒருவாறு புரியலாயிற்று. அவளும் முதலில் 'குடிவெறிதான்' என்று எண்ணினள். பிறகு உண்மை தெரிந்ததும் கீழே விழுந்து மூர்ச்சித்துப் போனள்.

கன்னியப்பனுக்குப் 'பிரதம சிகிச்சை' (First aid) செய்யத் தெரியும். நீண்ட நேரம் சிகிச்சை செய்த பின் அவள் மலர மலரக் கண்விழித்தாள். பிறகு கொஞ்சம் நினைவு வந்ததும், 'நான் பாவி —அந்த விதை நெல்லை விக்கக் கூடா தின்னு படாதபாடு படுத்தினேனே! இப்போ இந்தக் கொளந்தைகளையும் தவிக்க

விட்டு.......' என்று ' மேலே சொல்லி முடிக்காமல் திணறினள்.

' உன் குழந்தைகளைக் காப்பாற்றுவது இனி இந்தப் பாவியின் பொறுப்பு ! ' என்றார் ராவபகதூர். குழந்தைகளைப் பற்றிய கவலை அவளுக்குத் துளியும் வேண்டியதில்லை என்று கன்னியப்பனும் உறுதி கூறினர். அவளுடைய கண்கள் இவர்களை ஊடுருவிப் பார்த்தன. பிறகு அந்த முகத்தில் ஏதோ ஒருவித அமைதி ஏற்பட்டது போலத் தோன்றியது. அவள் தைரியமாக இருக்க வேண்டு மென்றும், குழந்தைகளுக்காக உயிர்வாழ வேண்டு மென்றும் கன்னியப்பன் சொன்னர். அவளோ ஒன்றும் சொல்லமுடியாமல் தலையை அசைத்தாள். கண்ணீர் மாலை மாலையாகப் பெருகியது. அப்பால் ஒரு மாதிரி விழித்தாள்.

காஞ்சிபுரம் டவுனுக்குள் ஓடிப்போய் எப்படியாவது, எங்கிருந்தாவது ஒரு டாக்டரை அழைத்து வருவதாக ராவ் பகதூரிடம் சொல்லி விட்டுக் கன்னியப்பன் குடிசையிலிருந்து வெளியே கிளம்ப யத்தனித்தார். ஆனல் அந்தச் சிரமத்தை அந்த அம்மாள் அவருக்குக் கொடுக்கவில்லை.........

இரண்டு பிரேதங்களையும் அடக்கம் செய்ய ஏற்பாடு செய்துவிட்டு, பொழுது விடிந்ததும், குழந்தைகளின் பராமரிப்புக்கு வேண்டிய காரியங்களைச் செய்தார்கள். பகற்பொழுதெல்லாம் இப்படிக் கழிந்தது. ' இ ன் றி ர வு காமாட்சி கோயிலுக்குப் போக வேண்டியதுதான் ' என்றார் கன்னியப்பன். ராவ்பகதூரும் ' அப்படியாவது கொஞ்சம் இந்தப் பாவியுள்ளத்திற்கு ஆறுதல் கிடைக்குமா ?' என்று எண்ணி ஒப்புக்கொண்டார்.

கோவிலில் இருவரும் பெரும் பணிவுடன் தேவியைத் தொழுதார்கள். ' நேற்று நடந்ததுபோன்ற சம்பவங்கள் எத்தனையோ நடக்கின்றன இந்த நாட்டிலே. அத்தகைய காட்சி ஒன்றை அந்தச் சுதந்திர இரவிலே நான்தான் உங்களுக்குக் காட்டினேன். ஆம், நீங்கள் ஒரு புதிய ஞானத்தையும் புதிய தே ச ப க் தி யை யு ம் அடையும் பொருட்டு !' என்று தேவியின் திரு முகத்திலே ஓர் ஆவேசம் மௌனப் பிரசங்கம் செய்வதுபோலத் தோன்றியது கன்னியப்பனுக்கு

ராவ்பகதூருக்கோ, ' பாணைக் கணக்காக நீ வாரியெடுத்த பொருளெல்லாம் இருள்தான் ! — ஏழைகளின் இரத்தக் கண்ணீரால் உன்னுடைய பட்டம், பதவியெல்லாம் அழுகிப் போயிருக்கின்றன ! இனியாவது உன் பொருளை நீ நல்வழிப் படுத்தவேண்டும். என் ஏழைக் குழந்தைகளுக்குச் செய்யும் பணியே எனக்குப் பணி' என்று அந்தத் திருமுகம், கண்டனமும் ஒரு புதிய நம்பிக்கையும் கலந்த தோரணையில் பேசுவதுபோலத் தோன்றியது.

* * * *

அந்தப் பயங்கர நிகழ்ச்சிகள் நடந்து சில தினங்களேயாகின்றன. ஆனல் ' அதற்குள் ராவ்பகதூர் சுந்தர முதலியார் எப்படி மாறிவிட்டார் ! ' என்று கன்னியப்பனுக்கே அதிசயமாகிவிட்டது. விருதையும் வியாபாரத்தையும் துறந்து விட்டார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. சுதந்திர இந்தியாவில் புதிய புதிய தேசப்பணிகள் செய்ய வேண்டுமென்று த ம் மு ட ன் தி ட் ட ம் போட்டு வரும் சுந்தர முதலியாரை இப்போது சுதந்தர முதலியார் என்று கூப்பிடுவதில் கன்னியப்பனுக்கு விசேஷ உத்ஸாகம். முதலியாருக்கும் அதில் திருப்திதான்.

# இராமாயண அரசியல்

( ஹிந்தி - தழுவல் )

எஸ். அம்புஜம்மாள்

## I. தசரதன் தவறு

இராமாயண நூல்கள் பல இருப்பினும் ஆதிகவி வால்மீகி வெளியிட்ட இராமாயணத்தை மூலாதாரமாகக் கொண்டே ஏனைய நூல்கள் இயற்றப்பட்டவையாதலால், அந்த ஆதிகாவியத்தை ஆதாரமாகக் கொண்டு அரசியல், இராஜதந்திரம் முதலான சில விஷயங்களை ஒருவாறு ஆராய்ந்து பார்க்கலாம்.

இராமாயணத்தின் முக்கிய நிகழ்ச்சி இராவணவதம். இதற்கு அவசியமாகிவிட்ட வனவாசத்தை முதன் முதல் எடுத்துக்கொண்டு ஆராய்வோம்.

வனவாசத்திற்குக் காரணம் என்ன? நாளதுவரை குற்றமெல்லாம் கைகேயி மீதே விழுந்திருக்கிறது. கைகேயிக்குத் துர்ப்புத்தி புகட்டிய குற்றம் மந்தரை என்ற கூனியைச் சார்ந்திருக்கிறது, எனினும், இராஜ தந்திரங்களை நன்கு அறிந்தோர் இராமாயணத்தை அரசியல் - நோக்கத்துடன் ஆராய்ந்து பார்த்தால், இராமனது வனவாசத்திற்கு உண்மையான காரணம் கைகேயியுமல்ல, கூனிமந்தரையுமல்ல, தசரத சக்கரவர்த்தியே என்பதைத் தெரிந்துகொள்வர்.

இராமன் முதலிய நான்கு சகோதரர்களும், மணம் முடித்து மிதிலைமா நகரிலிருந்து அயோத்தியம்பதிக்குத் திரும்பி வந்த சின்னாட்களிலெல்லாம், பரதனது தாய்விட்டு மாமன் அயோத்திக்கு வந்தான். பரதனை அழைத்துப்போகவே வந்திருக்கக்கூடும். ஆனால் திடீரென்று ஒரு நாள் மன்னர் மைந்தனைப் பார்த்து, "பரத! உன் மாமன் யுதாஜித்து இங்கே வந்து வெகுநாட்களாகிவிட்டன. உன்னை உடன் அழைத்துப் போகவே வந்துள்ளான். நீ சென்று உன் பாட்டனரைக் கண்டு வரவேண்டாமா?" என்றார். இதைக் கேட்டதும் பரதன் கேகய தேசம் புறப்பட்டுப் போனன். தசரதர் மனசிலே ஓர் எண்ணம் உதிக்கலாயிற்று. "நான் பிழைத் திருக்கும் போதே ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய்து காண்பேனே?" என்ற கவலை உதித்ததாம் மன்னர் மனசில் அப்பொழுது.

இதன் பிறகே அரசர் மந்திரிகளைக் கலந்து ஆலோசித்து ராமனுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் செய்வது என்ற தீர்மானத்திற்கு வந்தாராம்.

உடனே வெகுசீக்கிரத்தில் நான்கு திக்குகளிலுமுள்ள அரசர்களுக்கு அழைப்போலைகள் அனுப்பப்பட்டன. மிலேச்ச தேசத்து மன்னனும் வந்தான்; வன பர்வதப் பிரதேசத்து மகிபாலரும் வந்தனர். ஆனல் இருவர் மட்டும் வரவில்லை. தொலைதூரத்தில் இருந்தார்களாகையால் அவர்களுக்கு மட்டும் அழைப்போலை அனுப்பப்படவில்லையாம். "பின்னர் இச்சுபச் செய்தியைக் கேள்வியுற்றுக் கேகையனும் ஜனகனும் தாமே மகிழ்ச்சியுறப்போகின்றனர்" என்று வால்மீகி-வசனமே கூறுகிறது.

ராமன் பட்டாபிஷேகத்திற்கு ஒரு நாள் முன்புதான் ராஜசபை கூட்டப்பட்டது. அதுவரை பட்டாபிஷேகச் செய்தி எவருக்கும் எட்டவில்லை. தசரதர் சபையோரைப் பார்த்து, "ராமனுக்கு யுவராஜ்யாபிஷேகம் செய்ய விரும்புகிறேன்" என்றார். ராமன் தன் அருமையான திவ்யகுணங்கள் மூலம் அரசன் முதல் பிரஜை வரை அனைவர் மனசையும் கொள்ளைகொண்டிருந்தான். ஆதலால் தடைசொல்ல என்ன இருந்தது? ஏகமனதாய்ச் சபையோர் அனைவரும்

அரசர் சொல்லை ஆமோதித்துக் களிப் பெய்தினர்.

இத்தகைய ஆனந்த மகோத்ஸவத்திற்கு மகாராஜா கேகையமன்னனை அழையாது விட்டதேன்? உயிர்க் காதலி கைகேயி யின் செல்வன் பரதனை மறந்ததேன்? அப்படித்தான் அவசரப்பட்டுப் பட்டாபி ஷேகம் நடத்தும்படியான குடி முழுகிப் போம் சுந்தர்ப்பம் என்ன நேர்ந்து விட்டது? 'அரசன் வயோதிகன்' 'உயிர் நிலையற்றது' - என்பதை உத் தேசித்துத்தான் இந்தத் துரிதம் எனலாம். அரசர் அரண்மனை வாயிலில் யமகிங்கரர் காத்திருப்பது நிஜமானால், பரதனைப் பாட்டனர் அகத்திற்குப் போகவிட்டது மட்டும்?

இந்தப் பிரசினைகளில் அடங்கிய உண்மையை அரசியல்வாதிகளே தீர்க் கக்கூடும்.

வயது முதிர்ந்த பருவத்தில் மன்னர் மூன்றும் மகிஷியாக ஓர் இளங்குமரியை மணந்துகொண்டார். பிள்ளைப் பேறு அற்று இருந்த மன்னர் கைகேயிக்குப் பிறக்கும் பிள்ளைக்கு முடிசூட்டுவதாக வாக்குறுதியும் கொடுத்தார், விவாக சம யத்தில். இன்று வதுவை நிகழ்ந்து வெகு காலமாகிவிட்டது. அரசருக்குப் பிள் ளைப்பேறும் கிடைத்துவிட்டது. புதல்வர் நால்வரில் மூத்தவன் ராமனே, ராஜ்ய பாரத்தை வகிக்க வேண்டிய ஆற்றல் படைத்தவனுகக் காணப்பட்டான். ஆகை யால் அரசர் இப்போது செய்யத் தக்கது எது? ராமனுக்குப் பட்டாபிஷேகம் செய் வித்துத் தான் ராஜ்யபாரத்தினின்றும் விடுபடுபவதன்றோ? ஆனல், கண்கள் அக் கினிப் பிழம்பைக் கக்க, புருவம் நெளிய, உதடுகள் துடிக்க, சுந்தரி கைகேயி ரௌத்திராகாரமாய்க் கோபித்தெழு வாளே, அவளை அக்கோலத்தில் காண் பது அவ்வேழை அரசருக்குச் சாத்தி யமா? தசரதர் நிலைமை இருதலைக் கொள்ளி எறும்பை ஒத்திருந்தது.

கேகைய ராஜனுக்களித்த வாக்குறுதிப் படி பரதனுக்கே பட்டம் சூட்டலாமென் ருலோ, பிரஜைகள் ராமனையே அதிகம் விரும்பினர்கள். கலகஞ் செய்யவும் கூடும். பரதனுக்குப் பட்டமளிப்பதில் ராமனுக்கு ஆக்ஷேபனை ஏதும் இராது. அவன் சாந்தசீலன். ஆனல் தம்பி லட்சுமணன் கோபக்காரன். அவன் கலகம் செய்யத் தலைப்பட்டால் என்ன அனர்த்தந்தான் விளையாது? ராமனுக்கே பட்டம் சூட்டிவிடலாமென்ருலோ, கேகையன் மனஸ்தாபபட்டுப் போருக் கெழவும் கூடுமல்லவா? ஆகையால் இதற்காக ஒரு யுக்தி செய்தார் அரசர்.

பரதனை மெல்ல மாமன் வீட்டிற்கு அனுப்பிவைத்தார். முகூர்த்தம் சீக்கிரம் வைக்கப்பட்டது என்ற ஒரு சாக்கைக் கற்பித்து, கேகையனுக்கு அழைப்போலை அனுப்பாது விட்டார். பின்னர் அவன் சந்தேகம் கொள்ளாமலிருப்பதற்கே ஜனகனுக்கும் அழைப்போலை அனுப்ப வில்லை. அந்தக் கர்மயோகியா அழைப் போலை வரவில்லை என்று கோபித்துக் கொள்கிறவர்? மேலும் தன் மகள் சீதையே இளவரசிப் பட்டம் சூட்டிக் கொள்ளும்போது? இப்பொழுது கைகேயி சங்கதிதான் பாக்கி.

ராமனுடைய நல்லொழுக்கம் மாற்ருந் தாய்மார்கள் மனத்தையும் கவர்ந்து விட்டது. கைகேயிக்கு ராமன்மீது பிள்ளை வாஞ்சை. பட்டாபிஷேக நாள் நெருங்கிய பிறகு கைகேயிக்குச் செய்தி எட்டினுலும் பாதகமிராது என்று எண்ணினர் மன்னர்.

எனினும் அரசருடைய மனசில் சந்தேகம் என்ற கள்ளன் புகுந்துதான் இருந்தான். ஆகையால் முகூர்த்தத் திற்கு முதல்நாள் சாயந்தரம் வரை தன் பிரியக் காதலி கைகேயியிடம் இந்த விஷயத்தைச் சொல்லாமலே எல்லா ஏற் பாடுகளையும் செய்துவிட்டார்.

நிற்க, பட்டத்திற்குரியவன் ராமனு, பரதனு?—என்பதில் முதலிலிருந்தே அரண்மனையில் இரண்டு கட்சி இருந்து வந்தது என்பதற்கு வால்மீகி வசனத் திலேயே போதிய அத்தாட்சி கிடைக் கிறது. ராமன் அன்னை கௌசலையிடம் இச்சுபச் செய்தியைச் சொல்லும்போது,

கோசலை பின்வருமாறு ஆசிர்வதிக்கிறாள்: “ராம! நீ சிரஞ்சீவியாக இருப்பாய். உன் சத்துருக்கள் நாசமுற்றனர். என்னுடையவும் சுபத்திரையுடையவும் சுற்றம் சந்தோஷமுற நடப்பாய்” என்கிறாள். இங்கே கைகேயியின் சுற்றத்தைக் குறிப்பிடவில்லை. அவர்கள் ராமனுடைய முடிசூட்டுதலுக்குத் தடை செய்துவரும் சத்துரு இனத்தைச் சேர்ந்தவர் என்று தொனிக்கிறதல்லவா? மேலும் கௌசலைக்கும் கைகேயிக்கும் சக்களத்திப் போட்டி இருந்து வந்ததென்பதும், சுமித்திரை சக்களத்தியானாலும் அவளைத் தனக்கு அனுகூலையாகக் கௌசல்யாதேவி கருதினாள் என்பதும் தெளிவாகத் தெரிகிறதல்லவா?

இது இப்படியிருக்க, கேகையாதிபதிக்கு ஆதியிலிருந்து அரசர்மீது சந்தேகம்தான். அன்றியும் தன் பெண்ணின் பேதைமைக்குண பரிசயமும் அவனுக்குண்டு. பெரிய யோசனைசெய்து, தன் பணிப்பெண்களில் முக்கியமான மந்தரை என்பவளைப் பொறுக்கியெடுத்துக் கைகேயியுடன் அனுப்பி வைத்தான் விவாகத்தின்போதே.

மந்தரை, அரசியல் விஷயங்களில் நல்ல அனுபவஞானம் பெற்றவள். லோக வியவகாரம் அனைத்தும் தெரிந்தவள், மகா தந்திரசாலியுங்கூட.

காம வசப்பட்டு வாக்களித்த அரசர், பின்னுடிப் பட்டமகிஷிக்கு முதலில் பிள்ளைப்பேறு உண்டானால் குலவழக்கப்படி மூத்த மகனுக்கே அரசுரிமை என்ற ஒரு நீதியைக் கொண்டு, கேகையனுக்களித்த வாக்கைப் பிறழக்கூடும் என்று கூனி அறிந்திராவிட்டால், தசரதரின் மனோரதம் முற்றும் பாழ்பட்டுப் போயிராது. மந்தரை கைகேயிக்குக் கற்பித்த படிப்பில், ராமன் காட்டிற்குப் போவதே கைகேயிக்கு நன்மை பயப்பதாகும் என்பதை வற்புறுத்தியிருக்கிறாள்.

கைகேயி பிறந்த நாடு காஷ்மீரம். அந்த நாட்டு மக்களே எழில் மிக்கவர். கள்ளங் கபடமற்ற சுபாவமிருப்பினும், பிடிவாத குணம் பெரிதும் படைத்தவர். மூர்க்கத்தனத்திற்குப் பேர்போனவர். கைகேயி தன் சொந்த நன்மைகளைப் பற்றியாவது அதிகாரத்தைப் பற்றியாவது சிறிதும் கவலைப்படவில்லை. தன் சொத்துரிமையில் மந்தரைக்கு இருந்த அக்கரைகூட இவளுக்கு இல்லை. எனினும் மந்தரை போட்ட தூபதீபங்களினாலே கைகேயிக்கு மனமாற்றம் ஏற்பட்டது. ஒருதரம் தான் பிடித்த பிடியை எளிதில் விடக்கூடிய சுபாவம் மந்தரைக்கு இல்லை. ஆகையால் அரசரின் சாம தான பேத தண்ட உபாயங்கள் யாவும் கைகேயி விஷயத்தில் வியர்த்தமாயின.

தசரத மகாராஜர் செய்த சூழ்ச்சியை, மந்தரை தவிர வேறு ஒருவரும் அறிந்து கொள்ளவில்லை என்பதும், கூனி மந்தரை ராஜதந்திர ஆலோசனைகளைக் காற்றின் வாயிலாகக்கூட மோந்து உணரக்கூடியவள் என்பதும், அரசர் மீதும், ராமன்தாய் கௌசலைமீதும் சதா ஒரு கண் வைத்து வந்தாள் என்பதும், கைகேயியின் லாபத்திற்காக எந்தச் சதி வேணுமானாலும் செய்யக்கூடியவள் என்பதும் வால்மீகியின் வர்ணனையிலிருந்தே தெரியவருகிறது.

இராமாயணத்தின்படி, ஒருநாள் மந்தரை அரண்மனையின் உப்பரிக்கையின்மீது திடும்பிரவேசம் செய்தாள். அவள் கண்ட காட்சி, அயோத்தியா நகரின் ஒரு விசேஷ அலங்காரமே. மறுபுறம் திரும்பி நோக்கி, கௌசலையின் அரண்மனை வாயிலிலிருந்து பரிசுபெற்ற மகாஜனங்களின் கூட்டத்தைக் கண்டாள்.

விழுந்தது இடி தலையில் மந்தரைக்கு. அலங்கார பூஷிதையாக அவ்வழியே வந்துகொண்டிருந்த கௌசலையின் தாதியொருத்தியை விளித்து, “ராமன் தாய் மகாகருமி ஆயிற்றே, இன்று இவ்வளவு தானதருமம் செய்ய என்ன முகாந்திரம்?” என்று கேட்டுவைத்தாள். அந்தத் தாதியின் வாயிலாக, ராமன் தாய்க்குக் கிட்ட இருக்கும் நற்பேறு கேட்டு, உடம்பெல்லாம் எரியலாயிற்று மந்தரைக்கு. ஓடிச்சென்று படுத்திருந்த கைகேயியைத் திட்டலானாள். “அடிமுட்டாளே! வீடு பற்றி எரிகிறது, சொஸ்தமாகத் தூங்கு

கிறாயே! ஒரு அரசன் மகளாகவும், மற்றொரு அரசன் இஷ்டராணியாகவும் இருந்தும்கூட நீ ராஜதந்திரம் உணர்ந்தாய் இல்லை. அந்தக் கிழ அரசன், மேலுக்கு உன்மீது ஆசை காட்டி, உள்ளூர உன்பால் கொடுமை செய்கிறான். அந்தத் துஷ்டன் உன் மகனைப் பாட்டன் வீட்டிற்கு விரட்டி ராமன் வழியை முட்களின்றிச் செப்பனிட்டு விட்டான். இப்போது ராமனுக்கே ராஜ்யாதிகாரமெல்லாம் போகப்போகிறது!"— இதுதான் அவள் திட்டலின் சாரம்.

கைகேயியின் சுபாவ சித்தமான குணங்களை முன்பே வர்ணித்தாகிவிட்டது. ராஜதந்திர மறியாத அந்தச் சுந்தரியை ராஜா தசரதர் நன்றாக முகஸ்துதி செய்து வைத்திருந்தார். முதலில் ராமபட்டாபிஷேகப் பேச்சைக்கேட்ட அளவில் மகிழ்வுற்றுத் தன் கழுத்து முத்தாரத்தையே கூனிக்குப் பரிசளிக்க முற்பட்டாள். "ராமன் ராஜ்ய பாரத்தை வகிக்கும்படியானால், நீ சக்களத்தியின் முன்பு சேவகிபோலக் கைகட்டி நிற்க வேண்டிவரும். ராமனுக்கு ராஜபதவி கிடைத்தால் பந்துமித்திரர்களுடன், பரதன் கைகேயி முதலியோர்களுக்கு என்னென்ன விபத்துக்கள் நேரக்கூடும்" என்பதைப் படத்தில் வரையப்பட்ட ஒரு பயங்கர சித்திரம்போலக் கண் முன் தோன்றும்படி வர்ணித்துக் காட்டினாள் மந்தரை. அதன் பின்னால்தான் கைகேயி மந்தரை சொற்படி, அவள் ஆட்டி வைக்கும் மரப்பாவைபோலானாள்.

ஒரு சமயம் தேவாசுர யுத்தத்தில் தசரத மகாராஜா மூர்ச்சைபோட்டு விழவும், கூட இருந்த கைகேயி வேண்டிய சைத்தியோபசாரம் செய்து அரசருயிரைக் காக்கவும் நேர்ந்தது. அப்போது அரசர் மகிழ்வுற்று அவளுக்கு இரண்டு வரம் அளிப்பதாகச் சொல்லியிருந்தார். அந்த வரங்கள் இப்பொழுது பயன் பட்டன.

கைகேயியின் அரசியல் - குருவான மந்தரை, அவளைப் பார்த்து, "மன்னன் உனக்கு முன்பு கொடுத்திருந்த அந்த இரண்டு வரங்களில் ஒன்றைக் கொண்டு, பரதனுக்குப் பட்டம் சூட்டும்படியும், மற்றதைக்கொண்டு ராமனைப் பதினான்கு வருஷம் வனவாசம் செய்ய அனுப்பும்படியும், நீ கேட்டுப் பெற்றுக்கொள்ளு, அரசரிடம்" என்று ஏன் உபதேசம் செய்தாள்? கேகையனுக்கு அளித்த வாக்கை ஏன் நினைப்பு மூட்டவில்லை மந்தரை கைகேயிக்கு? ஏனென்றால் கேகையனுக்கு அளித்த வாக்குறுதியை வற்புறுத்துகிறவர் இன்று அயோத்தியில் ஒருவரும் இல்லை. மேலும் தர்மசாஸ்திரப் பிரகாரம் விவாக சமயத்தில் கொடுக்கப்படும் வாக்குக்கு யாதொரு மதிப்புமில்லை. பின்னும், எப்போதோ தூரதேசத்தில் நடந்த ஒரு விஷயத்தை,- அதுவும் விவாக சமயத்தில் - அயோத்தி மகாஜனங்கள் ஏன் கவனிக்கப் போகிறார்கள்? கைகேயியே நேரில் ராஜசபையில் வந்து தந்தைக்கு அளித்த வாக்கை எடுத்துக் கூறினால், ராமனுக்கு முடிசூட்ட வேணுமென்று ஆவலுடன் எதிர்பார்த்திருந்த வசிஷ்டர் முதலிய பெரியவர்கள் இவளை ஏசிப் பரிகசிக்கமாட்டார்களா? ஆகையால்தான் தேவாசுர யுத்தத்தின் போது அளித்த வரங்களைப் பயன்படுத்தச் செய்தாள் சமர்த்தையான மந்தரை. மேலும் இந்த வரங்களால் பரதனுக்குப் பட்டம் கிடைப்பது மட்டுமன்றி ராமனின் வனவாசமும் ஏற்படுகிறதல்லவா? தேவாசுர யுத்த நிகழ்ச்சிகள் அனைவருக்கும் பிரசித்தம்; அயோத்தி வாசிகள் நன்கு அறிவர்.

இங்ஙனம், அரசர் செய்த முதல் சூழ்ச்சியின் துர் விளைவால் அவருடைய மனோரதம், ராஜதந்திரம் யாவும் பாழ்பட்டுப் போகும்படி ஆயிற்று. அரசர் தாம் வீசிய வலையிலேயே அகப்பட்டுக் கொண்டார். ராமன் வனவாசத்திற்கு மூலகாரணம் கைகேயியுமில்லை, மந்தரையுமில்லை. ராஜா தசரதர்தாம்.

இராமாயணம் உலகப் புகழ்பெற்ற இதிகாசம். அதனுடைய சிறப்பியல்புகளுக்கு வரையில்லை. அத்தகைய நூலை அரசியல் திருஷ்டியுடன் ஆராய்ச்சி செய்வதும் ஓர் இன்றியமையாத படிப்பாகும் அரசியல்வாதிகளுக்கு.

அடுத்தபடியாக ராமனுடைய அரசியல் ஞானத்தை ஆராய்வோம்.

# அங்கும் இங்கும்

## தரும சக்கரம்

புதிய சுதந்திர இந்தியாவின் கொடி கோடிக்கணக்காக நமது நாட்டில் பறந்து கொண்டிருக்கிறது. இதைக் 'கோடிக்கு ஒரு கொடி' என்றார் ஒரு நகைச்சுவை நடிகர். இக்கொடியின் மூவர்ணம் குறித்தும், இக்கொடியின் நடு நாயகமாக ஒளிரும் தரும சக்கரத்தைக் குறித்தும் எத்தனையோ வியாக்கியானங்கள் செய்யப்படுகின்றன. வேதாந்தக் கலைஞரான ஸர். எஸ். ராதாகிருஷ்ணன் போன்றவர்களும், கும்பகோணம் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமி முதலான சமயஞானிகளும், கலைவாணர்களும், அரசியல் வாதிகளும் கொடியைப் பாராட்டித் தருமசக்கரத்தைப் போற்றியிருக்கிறார்கள். இவற்றின் உட்பொருள் முதலியவற்றைக் குறித்து விரிவுரைகளும் செய்திருக்கிறார்கள்.

பொதுவாக, பசுமையை இயற்கை வளத்திற்கு அறிகுறியாகவும், வெண்மையைத் தூய்மைக்கும் அறிவுக்கும் அடையாளமாகவும், செம்மையை மனச் செம்மையோடு கூடிய தியாகத்திற்கு நினைவுக்குறியாகவும் கருதலாம்.

சக்கரத்தைப் பொதுவாய் அசோக மன்னரின் தருமசக்கரமாகக் குறிப்பிடுகிறார்கள். ஆனால் ரிக்வேத காலம் தொடங்கிச் சக்கரம் நமது நாட்டின் மங்கள அறிகுறியாகப் பிரசித்திபெற்றிருக்கிறது. வாழ்க்கையை ஒழுங்குபடச் செய்யும் தரும நீதி அல்லது நியதிக்கு வேத காலத்திலேயே சக்கரம் ஓர் அறிகுறியாக அமைந்து விட்டதென்று ஊகிக்கலாம்.

காற்றாடிபோலச் சுழன்று கீழது மேலாகவும் மேலது கீழாகவும் செய்து இறுதியில் சமத்துவத்தை காட்டும் காலசக்கரத்தையும் நம் முன்னோர் நினைத்துப் பார்த்திருக்க வேண்டும். பார்த்து, வாழ்வையே ஒரு சக்கரமாகவும் உருவகித்திருக்கலாம். பிறகு அரசர்களுடைய 'ஆக்ஞா சக்கரம்' தோன்றியிருக்கவேண்டும். அப்பால் இராஜாதிராஜனாகிய திருமாலின் கையிலும் சக்கரம் ஏறி வீற்றிருந்து, துஷ்ட நிக்கிரக சிஷ்ட பரிபாலனத்திற்கு அறிகுறியாகியிருக்க வேண்டும்.

இத்தகைய சக்கரத்தைப் பௌத்தர்களும் தருமசக்கரமாக உபயோகித்துக் கொண்டார்கள் என்றால், அது பௌத்த மதத்திற்கும் இந்துமதத்திற்கும் உள்ள ஒற்றுமையைத்தான் வெளியிடுகிறது. வேதமதத்தின் ஒரு சீர்திருத்த இயக்கமாக ('புரட்சிகரமான சீர்திருத்த இயக்கமாக' என்று வேண்டுமானாலும் வைத்துக்கொள்ளலாம்)க் கிளைத்தது தான் புத்தமதம் என்பதற்கும் தரும சக்கரத்தை ஒரு சாட்சியாகக் கொள்ளலாம்.

* * * *

பழைய காங்கிரஸ் கொடிதான் ஒரு சிறு மாறுதலுடன் புதிய சுதந்திரக் கொடியாகி விட்டது; இந்த மாறுதலையும் ஒரு புரட்சிகரமான மாறுதல் என்று கருதலாம். கைராட்டைக்குப் பதில் சக்கரம் அமைந்துவிட்டதால், "யந்திர சாஸ்திர அபிவிருத்திக்கும், விஞ்ஞான வளர்ச்சிக்கும் தேசபக்தர்கள் இடையூறாக இருக்கிறார்கள்!" என்ற அபவாதத்தை இனி ஒருவரும் சொல்ல முடியாது. வாழ்க்கையின் பல துறைகளிலும் இடைவிடாது உழைத்து வெற்றி பெறுவதில் நாம் கண்ணும் கருத்துமாயிருக்கிறோம் என்பதை வற்புறுத்தவும், தாயின் மணிக்கொடி

யிலுள்ள மாற்றத்தை - கைராட்டை சக்கரமாகப் பரிணமித்து விட்டதை - ஒரு விசேஷ நினைவுக்குறியாகக் கருதலாம்.

தரும சக்கரத்துடன் தாயின் மணிக் கொடி வானளாவிப் பறக்கும்போது, கட்சிச் சண்டைகள், சாதிப்பூசல்கள், சமயப் பிணக்குகள் முதலானவை எவ்வளவு அற்பமாகத் தோன்றுகின்றன! இக்கொடி பனிமலையிலிருந்து குமரிமுனை வரையிலும் பறந்து இந்தியாவின் கலை - ஒருமையுடன் அரசியல்-ஒற்றுமைக்கும் ஒரு சின்னமாக விளங்கவேண்டும் என்பது தேச பக்தர்களின் பிராத்தனையாக இருக்கவேண்டும்.

* * * *

## அரவிந்தர் தரிசனம்

சுதந்திரத் திருநாளில், புதுவை யோகியும் அரசியல் ஞானியுமான அரவிந்தர் பலருக்கும் தரிசனம் அளித்தது, தேசபக்த அறிஞர்களுக்கெல்லாம் விசேஷ உவகை ஊட்டியிருக்கவேண்டும். காந்தி சகாப்தத்திற்குமுன் காட்டிலே தேசபக்திக்குப் புத்துயிர் அளித்துத் தேசியப் பெருங்கிளர்ச்சியைக் காட்டுத் தீயாக நாடும் நகரமும் பரப்பியவர்களில் அரவிந்த கோஷுக்கு முக்கிய ஸ்தானம் உண்டு.

அரவிந்தர் இந்தியாவுக்கு மட்டுமல்ல, உலகத்திற்கே ஒரு புதுவழி காட்டுகிறவர். ஸ்தூல அரசியல் வழியில் மட்டுமல்ல, சூட்சுமமான யோகநெறியிலும் ஒரு வழிகாட்டி. வாழ்க்கைப் பிரசினைகளைத் தீர்ப்பதற்கு உரிய பெருவழி காட்டி, மனிதனை இவ்வுலகிலேயே அமரனாக்கி, ஒரு புது யுகத்தை நிறுவ முயலும் நவீன மகரிஷிகளில் ஒருவர்.

## போரும் சமாதானமும்

சுதந்திர இந்தியா நிறுவ முயலும் புதுயுகத்தில் போரை ஒழித்துச் சமாதானத்தை நிலைநிறுத்துவது ஒரு பெரும் பிரசினையாக இருக்கவேண்டும் போர்களை ஒழிப்பதென்றால், வகுப்புப் பூசல் முதலான பிணக்குகளோடு அநாவசியமான போட்டி பிணக்குகளையும் ஒழிக்கத் தக்க முயற்சியும் சேர்ந்தது தான்.

வேதகாலத்திலேயே போர்கள் உண்டு. பாரதகாலம் தொடங்கி இன்றளவும் போர் நடைபெறாத ஆண்டுகள் சுமார் முந்நூறு தான் என்று ஒரு சரித்திரப் புலவர் கணக்கிட்டிருக்கிறார். மூவாயிரம் ஆண்டுகள் போர் நிகழ்ந்த ஆண்டுகளே என்று இவர் கூறுகிறார். எனினும் 'சமாதானம் வேண்டும்' என்ற ஆசைக்குக் குறைவில்லை. "சந்திர சூரியர்கள் உள்ளளவும் சமாதானம் நிலைபெறவேண்டும்!" என்றுதான் பலவேறு போர்களும் நிகழ்ந்திருக்கவேண்டும். இப்போது முற்றுப்பெற்ற இரண்டாவது உலக மகாயுத்தம்போல், 'போர்களை நிறுத்தும் போராகவே' ஒவ்வொரு போரும் கருதப்பட்டிருக்கவேண்டும். இந்த ரீதியில் சுமார் எண்ணாயிரம் சமாதான உடன்படிக்கைகள் செய்யப்பெற்று உடைபட்டிருக்கின்றனவாம்.

"மனிதன் இவ்வளவு அயோக்கியனா?" என்று பிரமிக்கவேண்டாம். சமாதான விருப்பமே மனித வர்க்கத்தின் இதய நலத்திற்குத்தான் சாட்சியாகிறது. ஆனால் என்ன தவறு? ஏதோ ஒரு 'இமாலயத் தவறு' ஏற்பட்டுத்தானே சமாதான விருப்பத்தைப் போர்வெறி வென்று ஒழித்திருக்கவேண்டும்.



மனிதனுக்கு ஆத்ம இச்சை, மிருக இச்சை என்று இருவகைக் குண விசேஷங்கள் உண்டு என்பது பிரசித்தம். மேலைநாட்டு யந்திர நாகரிக ரீதியும், வியாபாரப் போக்கும், பேராசைப் போட்டிகளும் மனிதனுடைய ஆத்ம இச்சையைச் சோபிக்கவிடாமல் மிருக இச்சையைத் தூண்டிவிடுகின்றன. சமாதான விருப்பம் ஆத்ம இச்சை. கோர யுத்தம், போட்டி பூசல்கள் எல்லாம் மிருக இச்சைகள். மேலைநாட்டாரின் ராணுவ நாகரிகம் ஹிம்சை முறையை வீரமாகவும் தேசாபிமானமாகவும் போற்றி, தடியெடுத்தவனுக்கு முடி சூட்டுகிறது. அந்த நாகரிகத்தின் 'இமாலயத் தவறு'களை உணர்ந்துதான், காந்தியடிகள் அஹிம்ஸா தர்மத்தை அடிப்படையாகக் கொண்ட ஒரு புதிய அரசியலை உருவாக்க முயல்கிறார். நாகரிகத்தின் சிறந்த அம்சம் அஹிம்சையை அடிப்படையாகக் கொண்ட கூட்டுறவுதான் என்கிறார். அஹிம்சையே தேச ஒற்றுமைக்கும் உலக ஒற்றுமைக்குப் மருந்து என்கிறார்.

காந்தியடிகள், வேதகாலம் தொடங்கி உருவாகி வந்திருக்கும் நமது நாகரிகத்தின் ஸாரமான பகுதியை விரிவாக்கி அதற்கு வலிமையூட்ட முயல்கிறார். "சேர்ந்து செல்லுங்கள்; ஒருமுகமாய்ப் பேசுங்கள்; ஒற்றுமையுடன் பிறருள்ளத்தை அறிந்துகொள்ளுங்கள். உங்கள் தீர்மானம் ஒன்றாகி இதயங்களும் ஒன்றாகட்டும். எல்லாரும் நலமடையும் பொருட்டு உங்கள் உள்ளங்கள் ஒற்றுமைப்படவேண்டும்" என்று ரிக்வேதம் முழக்குகிறது: இந்த வேத முரசைக் காந்தியடிகளும் நம் புது யுகத்திற்கு இசைந்த முறையில் முழக்குகிறார்.



# இரண்டு கச்சேரிகள்

(த. நா. ரா)


## ஓம்காரநாத் தாகூர்

நல்ல கற்பனை, அபாரமான சாதகம் இரண்டும் இருந்து விட்டால் பாடக ருடைய வெற்றியைப் பற்றிக் கேட்பா னேனன். சிறிது கேட்டுவிட்டால் சலிப் புத் தட்டி விடுகிறது என்று நாம் பெரும்பாலும் நினைக்கும் வடநாட்டு ஹிந்துஸ்தானி சங்கீதத்தை 2½ மணி நேரத்திற்குமேல் அநுபவிக்கச் செய்தார் பண்டிட் ஓம்காரநாத்தாகூர். தாகூர் பாடியவை இரண்டே ராகங்கள். அவ் விரண்டு ராகங்களுக்கு அவர் எடுத்துக் கொண்ட நேரம் இரண்டு மணிகள். வயது முதிர்ந்த இவ்விற்பன்னர் ' இளம் வித்வான்களும் மூக்கின் மேல் விரலை வைக்கும்படி நான்கு கட்டை சுருதிக்குப் பாடினர். என் காதுகளையே நம்ப முடிய வில்லை. சரீரத்தையும் அதன் மூலம் சாரீரத்தையும் காப்பாற்றி வந்துள்ளதை சங்கீத வித்வான்கள் பலர் அறிந்து கொண்டிருப்பார்கள் என நம்புகிறேன். மேலும் குரல் பண்பாட்டுப் பயிற்சி (Voice Culture) விஷயத்தில் வட நாட்டு வித்வான்கள் காட்டும் அக்கரை தாகூரின் சங்கீதத்தில் வெளிப்பட்டது. சுருதியில் லயித்து ஒன்றி நிற்கும் சாரீ ரம் தனி இன்பம் அளித்தது. தாகூரின் கானத்தில் பாவம் நிறைந்திருந்தது. அநுபவித்துப் பாடுவதினாலேதான் அங்க சேஷ்டைகள் (Mannerisms) அதிகம் இன்னாரிடம் காணப்படுகின்றது. பாவ பூர்வமான சங்கீதம். கடைசியில் இவர் பாடிய 'வந்தேமாதர' கீதத்தில் மன தைப் பறிகொடுத்தனர் ரஸிகர்கள். இந்தக் கச்சேரிக்குப் பக்கவாத்யமாக - இருவயலின்கள் - வாசித்த பரூர் ஸ்ரீ சுந் தரமய்யரின் குமாரர்கள் ஸ்ரீ கோபால கிருஷ்ணனும், அநந்தராமனும் காட்டிய தைரியத்திற்கும், ஆற்றலுக்கும் பாராட் டுகள். ஸ்ரீ தியாகராஜ சங்கீத வித்வத் சமாஜத்தார் செய்துவரும் சேவை பிரபல மானது. தாகூரின் கச்சேரிக்கு ஏற்பாடு செய்ததற்காக நம் பாராட்டுக்கள்.

## வீணைக் கச்சேரி

வாத்தியங்களில் வீணைக்கு தனிச் சிறப்பு உண்டு. வாத்தியங்களில் சிரோ மணியாக விளங்குவது அதுவே. தற் காலம் உள்ள சிறந்த வீணை வித்வான்களை விரல்விட்டு எண்ணிவிடலாம். காரைக் குடி ஸ்ரீ சாம்பசிவய்யர் போன்றவர்கள் ஒரு சிலர் தான் நம்மிடை உள்ளனர். இவ் வாத்ய சங்கீதத்தில் முன்னணிக்கு வந்து கொண்டுள்ளபல ஜூனியர் வித்வான்களை வரவேற்க வேண்டியதே. இவ்விளம் வித்வான்கள் கோஷ்டியில் சேர்ந்த சங் கீத பூஷணம் ஸ்ரீ பிச்சுமணி அய்யரது வாசிப்பைச் சமீபத்தில் தமிழிசைச் சங் கத்தின் ஆதரவில் நடந்த கச்சேரி யொன்றில் கேட்கச் சந்தர்ப்பம் கிடைத் தது. ஸ்ரீ பிச்சுமணி அய்யர் வாசிப்பில் நிதானம், தெளிவு, வாசிக்குமளவில் சிறப்பு இவ்வம்சங்கள் காணப்பட்டன. ராகஆலாபனங்களிலோ, கிருதிகள்வாசிப்

பதிலோ, நிரவல், ஸ்வர வாசிப்பிலோ வாசித்த அளவில் குறை சொல்வதற்கில்லாமல் வாசிக்கிறார். அன்று அவர் வாசித்த ஹரி காம்போஜி கர்நாடக சுத்தமாக அமைந்தது. மேலும் அவர் வாசித்த தர்பார், ரீதிகௌளை முதலிய ராகங்களைக் குறிப்பிட வேண்டும். கச்சேரியைக் கூடிய மட்டும் நன்றாக திட்டமிட்டுக் கொண்டவர் பெரும்பாலும் ஆதி தாளக் கிருதிகளையே வரிசையாக எடுத்துக்கொண்டிராமல், இதர தாளங்களையும் இடையிடையே விரவிக்கலந்து கிருதிகளைத் தேர்ந்தெடுத்திருந்தால் கச்சேரி மேலும் சோபித்திருக்கும். பக்கமாக வாசித்த வயலின்ஸ்ரீ ஜி. ஸ்ரீநிவாசனுக்குக் கற்பனை இருக்கிறது. ஆற்றலை வெளிப்படுத்த அவாவும் உள்ளது. மேலும் அவர் அன்று வித்வானுக்கு அநுசரணையாக நாதத்தைக் கொடுத்துச் சிறப்பித்து வந்தது பாராட்டத்தக்கது. ஆற்றலை வெளிப்படுத்தும் அவாவில் சில சந்தர்ப்பங்களில் சற்று அமிதமாக நேரம் எடுத்துக் கொள்கிறாரோ என்று சிலர் நினைத்திருக்கலாம். இச்சிறு விஷயத்தை ஸ்ரீநிவாஸன் சரிசெய்து கொள்வது சுலபம். வீணை வித்வானும் பக்கவாத்யக்காரருக்குச் சந்தர்ப்பங் கொடுப்பதில் சிறிது இன்னும் கொஞ்சம் தாராள மனப்பான்மை காட்டிவருவதும் எளிதே. மிருதங்கம் வாசித்த ஸ்ரீ சந்த்ரமௌளி நன்கு வாசித்தார். முக்கியமாக அடக்கி வாசித்தார் கச்சேரியின் பிற்பகுதியில்.



## உங்கட்கு தகவல்கள்

*

1. கோலி விளையாட்டு புராதன கிரீஸ் காலத்திலிருந்தே இருந்து வந்த தாம், பிலியார்ட்ஸ், பவல்ஸ்' (Billiards Bowls) போன்ற ஆட்டங்கள் இதனின்று உண்டானவையே.

2. பிரிட்டன் உலகில் விளையும் தேயிலையில் பாதியை வாங்கிக் கொள்கிறது.

3. வருமான வரி முதன் முதலில் பிரிட்டனில் 1798 வருடம் தற்காலிக யுத்த வருமான முறையாக போடப் பட்டதாம்.

4. உலகத்திலேயே மிகப்பெரிய மஹா சமுத்திரமான பஸிபிக் இரண்டு அட்லாண்டிக் மஹாசமுத்திரங்களையும் தன்னுள் கொண்டு ஒரு சில மத்தியதரைக் கடல்களையும் கொள்ளக்கூடியதாம்.

5. பி. பி. ஸி. நிகழ்ச்சிகளுக்காக ஒரு மணிக்கு சுமார் 1000 பவுன்கள் சில விடப்படுகிறதாம்.

6. கீழ்க்குரலில் பாடும் ஒரு பறவையின் ஹிருதயம் ஒரு நிமிடத்திற்கு 615 முறை அடித்துக்கொள்ளுகிறதாம்.

---


பாத்ருடுவின்

**பாலசஞ்சீவினி (Regd.)**

(இது ஒன்றுதான் அசல் விஜயநகர மருந்து)

குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டி வியாதிகளுக்குச் சிறந்த மருந்து

சொற்ப காலத்திலேயே நிச்சய குணமளிக்கும்.

58 வருஷகாலமாகப் பல்லாயிரக் கணக்கான குழந்தைகளை இக்கொடிய குலைக்கட்டி வியாதியினின்று காப்பாற்றியிருப்பதனுல் பல பிரக்யாதி பெற்ற டாக்டர்கள் இச் சஞ்சீவினியை உபயோகித்துக் கொண்டிருக்கிறார்கள்

எல்லா மருந்து ஷாப்புகளிலும் கிடைக்கும்.

போலி மருந்துகளைக்கண்டு ஏமாருதீர்கள்

**டாக்டர் பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதர்,**

11, தெற்கு மாடவிதி, மயிலாப்பூர், மதராஸ்.

கும்பகோணம் கிளை :—
7, சாரங்கபாணி கோவில்,
கீழவீதி.

திருச்சி கிளை :—
15, புகழியபிள்ளை தெரு,
தெப்பக்குளம் போஸ்டு

# குறிப்புகள்

❋

## அந்தக வேலைக்காரர்கள்

அந்தக ஸ்திரீகள் தங்களைவிட நல்ல திர்ஷ்டம் வாய்க்கப்பெற்ற சகோதரிகளைப்போல் தொழில் உலகில் தங்கள் ஸ்தானத்தைப் பெற்று விளங்கும்படி பிரிட்டன் செய்து வருகிறது. தக்க பயிற்சி மூலம் அந்தக ஸ்திரீகள் தகுதி வாய்ந்த, சந்தோஷத்துடன் கூடிய, குடும்ப ஸ்திரீகளாகிறார்கள். உடலைப் பிடித்துவிடும் தொழிலாளர்களாக விளங்க அவர்களுடைய மெல்லிய, உணர்ச்சியுடன் கூடிய விரல்கள் தக்க வையா யமைந்துள்ளன; மேலும் அநேக காரியாலயங்களில் திருப்தியையும் பூர்ணமான வாழ்வையும் பெற்று, திறமை மிக்க காரியதரிசிகளாய் 'ப்ரெய்லி' சுருக்கெழுத்து யந்திரங்களின் மூலம் அலுவல்கடிதங்களை 'டைப்' செய்து சிறந்து விளங்குகிறார்கள்.

## செவிடர்களுக்கு ரேடியோ

குடும்பத்தில் ஒருவன் செவிடனாயிருப்பின் அக்குடும்பத்திலுள்ள மற்றவர்கள் ரேடியோ கேட்பதில் சில அசௌகரியங்கள் உண்டு. குறையுள்ளவன் தான் நன்கு கேட்க ரேடியோவை உரக்கச் சத்திக்கச் செய்தால் மற்றவர்கள் ஏன், அண்டைவீட்டார்கள் கூட அதன் உபத்திரவத்தைச் சகிக்க வேண்டிவரும்.

ஒரு பிரிட்டிஷ் கம்பெனி இந்நிலையைச் சமாளிக்க ஒரு புது 'ரேடியோ செட்', டைத் தயார் செய்துள்ளது. இதில் ஒலி பெருக்கியோடு, செவிடன் தன்னிஷ்டம் போல் தனக்குச் -சௌகரியமாயிருக்கும் படி ஒலியைப் பெருக்கிக் கொள்ளும் படி ஒரு ப்ரத்யேக ஒலிக்குழல் (Head Phone) ஒன்று இருக்கிறது. ரேடியோ வேலைசெய்யாத வேளைகளில் இந்தக் குழலின் உதவியால், இதரர்களுடன் சம்பாஷணைகளில் கஷ்டமில்லாமல் கலந்து கொள்ளவும் முடியும்.

* * * *

## ஆஸ்பத்திரி சிகிச்சையாக வேலை

வைத்திய சிகிச்சையுடன், நோயாளிக்குத் தக்கபடி தொழிற் பயிற்சியையும் இணைத்து நடத்த ஒரு ஸ்தாபனம் ஸட்டன் அவசரச் சிகிச்சை சாலையில்' திறக்கப்பட்டுள்ளது. இந்த ஸ்தாபனத்தில் 100 படுக்கைகள் உண்டு. ஆண்கள் பெண்கள் இருபாலர்களும் சிகிச்சையளிக்கப்படுவார்கள். ஆறு அல்லது எட்டு வாரங்கள் அவர்கள் தங்கியிருக்கையில், மூளைச் சிகிச்சை பெறும்போதே பலவித அலுவல்களில் அமர்த்தப் படுவார்கள். தொழிற்சாலை, காரியாலயம், அல்லது கடை எந்தவித வேலையளிக்கப் பட்டாலும் கூடியவரையில் இயற்கைத் தொழில் சூழ்நிலைக்குத் தக்கபடியான நிலைமைகளிலேயே அவ்வேலை நடத்தப் படும்.



# பத்திரிகையுலகம்

"எத்தனை பத்திரிகைகள் புல புல வென்று கிளம்பி விட்டன, கலகல வென்று ஆராவாரஞ் செய்கின்றன! நம் தமிழ் நாட்டிலே மழைக் காலத்து ஈசல்கள் போலத் தோன்றி மாய்ந்து போகும் பத்திரிகைகள் எத்தனை!" என்று அங்கலாய்த்தார் ஒரு நண்பர்.

ஐந்து நூற்றுண்டுகளுக்கு முன்பு ஐரோப்பாவிலே பரவத் தொடங்கியது அச்சுவித்தை. இன்று நம் தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலும் பரவியிருக்கிறது. 16-ம் நூற்றுண்டில் முதல் முதல் நமது நாட்டுக்கு வந்து சேர்ந்தது. 19-ம் நூற்றுண்டின் இடைப்பகுதியில் சென்னைமா நகரில் தமிழ் அச்சுக்கூடங்களின் தொகை சுமார் பத்தே. அக்காலத்திலேயே முதலாவது தமிழ்ப் பத்திரிகை ஆரம்பமாயிற்று. அன்று தொட்டு 1937-ம் ஆண்டு வரையில்— அதாவது சுமார் 70 ஆண்டுகளுக்கிடையில் எழுநூறுக்கு மேலான தமிழ்ப்பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. அவற்றுள் பெரும்பாலானவை அகால மரணம் அடைந்து விட்டன. 1937-ல் நிலை பெற்றிருந்த பத்திரிகைகள் சுமார் நூறுதான். அதே ஆண்டில் சுமார் 25 பத்திரிகைகள் புதிதாக ஆரம்பமாயின.

சென்ற உலகமகாயுத்தத்திற்குப் பின் ஏராளமான தமிழ்ப் பத்திரிகைகள் தோன்றியிருக்கின்றன. புதிய புதிய பத்திரிகைகள் இன்று தோன்றி வருகின்றன. ஆனல் விஞ்ஞானம், சரித்திரம், கலை முதலான பலவேறு அறிவுத் துறைகளிலும் தமிழர் வாழ்வை வளமுறச் செய்யும் ரீதியில் சிறந்த பெருநோக்குள்ள பத்திரிகைகள் இனிமேல் தான் தோன்ற வேண்டும். பெரும்பாலும் அரசியல் பத்திரிகைகளும் வேடிக்கைப் பத்திரிகைகளுமே தோன்றி வளர்கின்றன.

முன்பு சமயம், தத்துவம் ஆகிய துறைகளிலே பெரும்பாலும் பத்திரிகைகள் வழங்கலாயின. சைவம், வைஷ்ணவம் ஆகிய இரண்டு சமயங்களும் பத்திரிகைகள் வாயிலாகப் பிரசாரம் நடத்தி வந்தன. இலக்கியப் பத்திரிகைகளும் சில தோன்றிப் பசியும் பஞ்சமுமாய்க் காலம் தள்ளிவந்தன. இன்றோ அரசியல் பத்திரிகைகள் தவிர, சிறு கதைகளையும் நகைச்சுவைக் கட்டுரைகளையும் வெளியிடும் பத்திரிகைகளே செல்வாக்கு அடைந்திருக்கின்றன. சமயத்தையும் தத்துவத்தையும் தேசியத்தையும் கண்டிக்கும் சிற்சில சுய மரியாதைப் பத்திரிகைகளும் கட்சி அபிமானிகளால் ஆதரிக்கப்படுகின்றன. "தேவாங்கமகா ஜோதி" "தத்துவ இஸ்லாம்" "தாருல் இஸ்லாம்" "குகவேளாளர்" என்றெல்லாம் வகுப்புவாதப் பெயர்கள் தாங்கிய பத்திரிகைகள் இன்று பிரசித்தமாகக் கருதப்படாவிட்டாலும், வகுப்புப் பிணக்குகளை வளர்க்கும் பத்திரிகைகள் படாடோபமான பெயர்களோடு இன்றும் உலாவக் காண்கிறோம்.

அந்நாளில் "விவேகாநந்தம்' "சுபோத பாரிஜாதம்" "யதார்த்த பாஸ்கரன்" "ஜனபிமானி" "ஆனந்த குணபோதினி" "அமிர்தகுண போதினி" "விவேகபோதினி" "கல்ப தரு" என்றெல்லாம் வடமொழி பெயர்கள் சூடி மாசிகைகள் மலர்வதும், விரைவில் வாடுவதும் மறைவதுமாயிருந்தன. "பிழைக்கும் வழி" "போசிரியன்" "தமிழ்ச் சிந்தாமணி" முதலான தமிழ்ப் பெயர்களுடனும் சில பத்திரிகைகள் வெளிவந்திருக்கின்றன. இடையிடையே சிற்சில விவசாயப் பத்திரிகைகளும்

சோதிடப் பத்திரிகைகளும் கிளம்பி மினு மினுத்து மாய்ந்ததுமுண்டு. பொருளாதாரம் விஞ்ஞானம் முதலான துறைகளில் அத்திபூத்ததுபோல் தோன்றிய சிற்சில பத்திரிகைகள் பொதுமக்களின் ஆதரவின்மையால் மறைந்து விட்டன. சில பத்திரிகைகள் நிர்வாகத் திறமைக் குறைவினுலும் மறைந்து போயின.

பழைய பத்திரிகைகளில் "லோகோ பகாரி" இன்றும் நடைபெற்று வருகிறது. "ஜன விநோதினி", பாரதியார் நடத்திய இந்தியா ஆகிய பத்திரிகைகள் "செத்தும் சிரஞ்சீவிகள்" என்ற ரீதியில் நடைபெற்றிருக்கின்றன. அ. மாதவையா நடத்திய பஞ்சாமிர்தமும் சில ஆண்டுகள் சிறப்பாக நடைபெற்று வந்தது,

பழைய காலத்திலும் விகடப் பத்திரிகைகள் தோன்றியதுண்டு. 'விஜய விகடன்' 'விகட ரத்தினம்' 'மகா விகட தூதன்' 'விகட சக்கரன்' முதலான பத்திரிகைகள், இப்போது தமிழ் நாட்டின் மூலை முடுக்குகளிலும் தமிழர்கள் வசிக்கும் வேறு பிரதேசங்களிலும் விசேஷமான செல்வாக்குடன் உலவி வரும் 'ஆனந்த விகடன்' பத்திரிகையின் முன்னேடிகள்.

தமிழர்கள் பிரெஞ்சிந்தியாவிலும் இலங்கைத் தீவிலும் பர்மாவிலும் மலேயா நாட்டிலும் தென்னுப்பிரிக்காவிலும் தமிழ்ப் பத்திரிகைகள் நடத்தி வந்திருக்கிறுர்கள். சில பெண்களும் தமிழ் நாட்டில் பத்திரிகை நடத்தியிருக்கிறுர்கள். சுமார் 35 ஆண்டுகளுக்கு முன்பே ஒரு பெண்மணி சென்னையில் 'பெண் கல்வி' என்ற மாசிகையை நடத்தி வந்தார். இன்றும் ஸ்ரீமதி கோதை நாயகி அம்மாள் 'குகப்பிரியை' முதலானவர்கள் பத்திரிகை நடத்தி வருவது பிரசித்தம்.

இன்று 'ஆனந்த விகடன்' 'கல்கி' முதலான பத்திரிகைகள் தமிழ் நாட்டுக்கு வெளியிலும் பிரசித்தமாய் இருக்கின்றன. தேசிய முன்னணியிலே 'சுதேசமித்திரன்' 'தினசரி' 'தினமணி' முதலான பத்திரிகைகளைப் போல், இந்த விகடப் பத்திரிகைகளும் பெருந்துணையாக நின்று போராடியிருக்கின்றன. இவை நாட்டுக்கு விடுதலை தேடியதோடு தமிழுக்கும் விடுதலைதேடியிருக்கின்றன. தமிழையும் இன்று ஆங்கிலம் போல் கையாள முடியும் என்றால் அதற்கு உதவியவர்கள் பண்டிதர்களைக் காட்டிலும் பத்திரிகைக் காரர்களே! இத்துறையில் பாரதியார் நடத்திய 'இந்தியா' பெருந்தொண்டு புரிந்து இன்றைய பத்திரிகைகளுக்கும் முன் மாதிரி அந்தப்பத்திரிகையைத் தழுவி இலக்கிய சுவையுள்ள பொதுமக்களிடையே அறிவைப் பரப்பும் நிலையில் நல்ல நல்ல பத்திரிகைகள் தோன்ற வேண்டும். தோன்றும் போது, தமிழ் மொழியின் வளமும் தமிழ் நாட்டின் அறிவு வளமும் ஒருங்கே பெருகும் என்பது திண்ணம்.

காப்பி சாப்பிடுவது போல் தமிழ்ப் பத்திரிகை படிப்பதும், நாடு நகரமெல்லாம் பரவிவிட்டது. எனினும் உள்ளத் திற்கும் 'வைடமின்' ஜீவசத்துள்ள நல்லுணவு வேண்டும். பத்திரிகை என்ற பெயரால் வகுப்புப் பிணக்கையும் இன்பப் பிணக்கையும் சமயத் துவேஷத்தையும் மூட்டி விடுவோர், நெய் என்ற பெயரால் ஆரோக்கியத்தைக் கெடுக்கும் கலப்புச் சரக்கை விற்பனை செய்வோரைக் காட்டிலும் மோசக்காரர்கள் என்றே கருதப்பட வேண்டும்.

'சுதந்திர இந்தியா' வந்துவிட்டதென்று சோம்பித் திரிவது எவ்வளவு தவறே, அதற்கும் மேலான தவறு 'இனம்' 'ஜாதி' என்னும் பிணக்குகளைப் படைத்து நிலைபெறச் செய்வது. இத்தகைய விவாதங்களில் கீழ்த்தரமான பாஷையைக் கையாளுவது தமிழ் மொழிக்கும் துரோகம்.

'ஆனந்த விகடன்' சுதந்திர மலரில் ஆசிரியர் வ. ரா. 'பத்திரிகைத்தொழில்' என்பது குறித்துச் சில நல்ல குறிப்புகளை வெளியிட்டிருக்கிறுர். அவற்றி

னிடையே “ பத்திரிகை வியாபாரம் வலுக்க வேண்டும் என்று பொய்யைப் புனைந்து எழுதினால் என்னமாயிருக்கும்” என்று கேட்கிறார். ஓர் ஆங்கில அறிஞர் பல ஆண்டுகளுக்கு முன்பு, பொதுவாகப் பத்திரிகையைக் குறிப்பிடும் போது, “ பொய்யே அதன் மூச்சுக்காற்று ; கொலையே அதற்கு உயிர் !” என்று வருணித்தார். ஆனால், “ பொய்ப் பிரசாரம் பத்திரிகைகளையே கொன்றுவிடும் ! ” என்ற உண்மையை இந்நாளில் கௌரவமான பத்திரிகைகளெல்லாம் உணர்ந்து ஒழுகுகின்றன.

நம் தமிழ் நாட்டில் சிற்சில பத்திரிகைகள் ஆபாசப் படங்களாலும் கீழ்த்தரமான பாஷை நடையாலும், பொய் வதந்திகளைப் பரப்புவதாலும் தங்களை விளம்பரப் படுத்திக் கொள்ளலாம் என்று இன்றும் கருதுவதுபோலத் தோன்றுகிறது. பத்திரிகைத் தொழிலில் இது தற்கொலைதான் ! “ சுதந்திர இந்தியா ” உண்மையான சுதந்திர இந்தியர் ஆக்குவதற்குப் பாடுபடும் பத்திரிகைகள் இத்தகைய குறுக்கு வழிகளில் விழுந்து இடர்ப்படலாகாது. பத்திரிகைத் தொழிலின் கௌரவத்தைப் பத்திரிகைகள் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.



## மதிப்புரை

*

கீதத்தமிழ்:— ஆசிரியர் திருவாசகம் கே. எம். பாலசுப்பிரமணியம் பி. ஏ. பி. எல்., வழக்கறிஞர். கிடைக்குமிடம் : ‘ முருகவேள் ’ புத்தகசாலை, இராயப் பேட்டை, சென்னை. விலை ரூபா - 3.

தமிழிசை புத்துயிர் பெற்றுவரும் இந் நாளில் “ கீதத்தமிழ் ” விசேஷ உவகை யுடன் வரவேற்கத்தக்கது. அழகான கருத்துக்கள் பக்தியுள்ளத்தில் ஊறி இசையோடு இசைந்து சாகித்தியமாக உருவெடுக்கும் போது, அன்பும் இசையும் கனிந்த தமிழுள்ளங்கள் வரவேற்கத்தான் வேண்டும். இப்பாடல்கள் பொதுவாகக் கடவுளன்பைத் தூண்டுவதால், “ இவை பழமை தழுவியவை, புதுமை இலக்கியமாகத் தோன்றவில்லை ! ” என்று மறுமலர்ச்சி எழுத்தாளர்களும், வேறு புதுமை - எழுத்தாளர்களும் சொல்லக் கூடும். இவர்களுக்கு விடையாக, “ இந்நாட்டில் சிவநேசமும் தமிழ்க்காதலும் ஒன்றே ; இவை பழமையினும் பழமையானவை, புதுமையினும் புதுமையானவை! ” என்று சொல்லிவிடலாம். எனினும்; இத்தகைய தமிழ்வளமும் பக்திப்பண்பும் வாய்ந்த இவ்வாசிரியர் புதுமைத் துறைகளிலும் இசைப்பாடல்கள் பாடுவார் என்று நம்புகிறோம் ; அடுத்தபதிப்பில், இப்பாடல்களை ஆசிரியர் சுர அமைப்புடன் வெளியிடுவார் என்றும் எதிர்பார்க்கிறோம். இசை வல்லோர் இசை யரங்குகளில் இப்பாடல்களைப் பாடிப் பாடித் தமிழ் நாடெங்கும் முழங்கச் செய்யவேண்டும். அதுவே ஆசிரியர் காலத்தால் செய்த உதவிக்குத் தக்க கைம்மாறாகும்.

சுதந்திர பாரத மணிக்கோடி :—பதிப்பாசிரியர்: துர்க்காதாஸ் எஸ். கே. ஸ்வாமி. கிடைக்குமிடம்: சித்திரபானு வெளியீடு, 11a, ஆடம்தெரு, மயிலாப்பூர், சென்னை. விலை அணா 4.

இச்சிறு பிரசுரத்தில் இரண்டு கொடிப் பாடல்களும், சுதந்தரத்தைக் குறித்தும் சுதந்திர வாழ்வைக்குறித்தும் ஓர் இசைப் பாட்டும், கலைமகள் ஆசிரியர் பாடிய ஒரு விருத்தப்பாட்டும், இரண்டு வகைக் குறிப்புக்களும் வெளியிடப் பெற்றிருக்கின்றன. எஸ். கே. ஸ்வாமியின் பாடல்கள் மூன்றும் இசையில் பாட வேண்டுமென்றே இயற்றப்பட்டவை. ஆர்ட் காகிதத்தில் எட்டுப் பக்கங்கள் கொண்ட இச்சிறு பிரசுரத்தில் அச்சுப் பிழைகள் காணப்படுவது வருந்தத் தக்கது.

## வரப்பெற்றோம்

1. கடவுள் சித்தம்:—ஆசிரியர் கே. ராஜகோபாலாசாரியார், கலா நிலையம். கிடைக்குமிடம் “தமிழ்நாடு வெளியீடு” 33, பிராட்வே சென்னை. விலை ரூபா 2.

2. சித்திரங்களும் சொற் சித்திரங்களும்:-ஆங்கிலத்தில் ஸ்ரீ பி. வி. பதி எழுதிய நூலின் மொழிபெயர்ப்பு. கிடைக்குமிடம்: “ தமிழ்நாடு வெளியீடு, 33, பிராட்வே, சென்னை. விலை ரூபா 5. இவற்றின் மதிப்புரை அடுத்த ‘ மணி ’ யில் வெளிவரும்.

